விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, ஐப்பசி 23 உ. சனி (8-11-69) ஷஃபான் 27 புத்தகம் 23 இதழ் 52




### சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ்

# "எவரையும் பலவந்தமாக நாடுகடத்திவிட முடியாது"

## சர்வதேச சட்டங்களும் இதனை அனுமதிக்காது"

"சிறிமா—சாத்திரி ஒப்பந்தச்சட்டத்தின் கீழ் இலங்கை அரசாங்கம் எந்த ஒரு இந்திய வம்சாவளிப் பிரஜையையும் பலவந்தமாகப்பிடித்து இந்தியாவுக்கு நாடு கடத்திவிட முடியாது. அப்படிச் செய்வதற்கு சர்வதேச சட்டங்களும் அனுமதிக்காது. எவரையாவது அவரது இஷ்டமின்றி பலவந்தமாக இலங்கை அரசு இந்தியாவுக்கு அனுப்ப முயன்றால் அப்படி அனுப்பப்படுபவரை இந்திய அரசு ஏற்றுக் கொள்ளவும் மாட்டாது. எனவே கட்டாயநாடுகடத்தல் என்ற பேச்சுக்கு துளியும் இடமில்லை. அப்படி நடக்க இலங்கை அரசு முற்பட்டால், சிறிமா—சாத்திரி ஒப்பந்தமே உடைந்துபோகும். இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் இதை கடுமையாக எதிர்க்கும்"

—இவ்வாறு இவ்வாரம் இலங்கை வந்திருந்த தி. மு. கழகத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் தென்சென்னை எம். பியும் முரசொலி ஏட்டின் ஆசிரியருமாகிய திரு. மாறன். எம். ஏ சுதந்திரன் நிருபருக்களித்த பேட்டியொன்றின் போது அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்தார்.

## தென் இலங்கையிலிருந்து ஓர் ஆதரவுக் குரல்!

"தமிழர்களே! நீங்கள் இந்நாட்டின் குடிமக்கள். இந்நாட்டில் சகல உரிமைகளையும் அனுபவிப்பதற்கு உங்களுக்கு உரிமையுண்டு. உங்கள் உரிமைகளை ஒருபோதும் விட்டுக் கொடுக்காதீர்கள். உங்கள் உரிமைகளுக்காக ஒன்று சேர்ந்து போராடத் தயங்காதீர்கள்—

இப்படி தமிழினத்தின் உரிமைக் குரலுக்கு ஆதரவு தெரிவித்திருப்பவர் ரஷியாவில் தூதுவராக நியமனம்பெற விருக்கும் முன்னாள் சமசமாஜ பிரமுகரான திரு. ஜாக் கொத்தலாவலை. பதுளையில் ஓர் கூட்டத்திலேயே அவர் இவ்விதம் தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்களிடம்இப் படிப்பட்ட நல்ல உள்ளங்கள் இன்னும் பெருகட்டும்!

ஒப்பந்தத்தில் கூறப்பட்ட 7:4 விகிதாசாரப்படி இந்திய தூதரகத்தில் இந்தியப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இலங்கை அரசு இலங்கைப் பிரஜாவுரிமையை இன்னும் வழங்கவில்லை யென்பதை திரு. மாறனிடம் சுட்டிக்காட்டி, அந்த எண்ணிக்கையை இலங்கை அரசு எட்டிப்பிடிக்கும் வரை இந்திய பிரஜை பதிவு வேலையை நிறுத்தி வைக்க வேண்டுமென டெல்லி மத்திய அரசிடம் தமிழ் நாடுஅரசு இடித்துரைக்குமா என்று கேட்ட போது திரு. மாறன் கூறியதாவது:-

"இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவதில் இலங்கை அரசு காட்டும் அக்கறையினத்தை தமிழ் நாடு அரசு கவனித்து வருகிறது. இது குறித்து மத்திய அரசுடன் நாம் இப்போது பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கின்றோம். விரைவில் இந்திய அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன்."

தமிழ் நாடு அரசாங்கத்தின் சாதனைகள் பற்றி கேட்டபோது, அண்ணா காட்டிய வழியில் தமிழ்நாடு அரசு பல சாதனைகளைப் புரிந்து வருவதாக திரு. மாறன் தெரிவித்தார். மதுவிலக்கை தி. மு. க. அரசு ஒரு போதுமே கைவிடப் போவதில்லையென்றும் கூறினார்.

அகில இந்திய தேசிய காங்கிரசில் ஏற்பட்டுள்ள பிளவு துரதிருஷ்டவசமானது என்றும் திரு, மாறன் கருத்தறிவித்தார்.

தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதியின் உடல் நலம் குறித்து விசாரித்த போது, இரத்தக் குறைவால் ஏற்படும் இரத்த அமுக்கத்தில் கஷ்டப்பட்டதாகவும் இப்போது தேறி வருவதாகவும் தெரிவித்தார் திரு. மாறன்.

## வி. நவரத்தினம் கூற்றுக்கு முரசொலி மாறன் பதில்!

தமிழரசுக் கட்சியிலிருந்து பிரிந்து சென்று சுயாட்சிக் கழகம் அமைத்துள்ள ஊர்காவற்றுறை பா. உ. திரு. வி. நவரத்தினம் சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தை ஆதரித்ததன் மூலம் ஐந்தேகால் இலட்சம் பேரை பலவந்தமாக நாடுகடத்த தமிழரசுக் கட்சி இணங்கிவிட்டதாக குற்றம் சாட்டி வருகிறாரல்லவா?

திரு. நவரத்தினத்தின் இக் குற்றச்சாட்டினைச் சுட்டிக் காட்டி சிறிமா—சாத்திரி ஒப்பந்தப்படி இலங்கையிலிருந்து எந்த ஒரு பிரஜையையும் பலவந்தமாக நாடுகடத்துவதற்கு இடமுண்டா என்று கேட்டபோதே திரு. மாறன் மேற் கண்டபதிலைத் தெரிவித்தார்.

திரு. மாறன் மேலும் கூறியதாவது:-

இந்திய நாட்டின் பிரஜையாவதற்கு மனப்பூர்வமாக விரும்பி முன்வராத எவரையும் இலங்கையிலிருந்து பலவந்தமாக இந்தியாவுக்கு அனுப்பிவிட முடியாது. சிறிமா சாத்திரி ஒப்பந்தம்மட்டுமல்ல, சர்வதேச சட்டங்களும் கூட இதனை அனுமதிக்காது. பலவந்தமாக இங்கிருந்து அனுப்பப்படும் எவரையும் இந்திய அரசு ஏற்றுக் கொள்ளவும் முன்வராது. எனவே கட்டாய நாடுகடத்தலுக்கு துளியும் இடமில்லை.

## திருமலையை மீட்கலாம்!

திருமலையிலே தமிழ் பல்கலைக்கழகம் அமைந்தால்—

ஆயிரக்கணக்கான தமிழ், முஸ்லிம் மாணவர்கள் திருமலையிலேயே தங்கி நிற்பர்.

இம்மாணவர்களின் பெற்றோர், உற்றார், உறவினர் நண்பர்கள் — அடிக்கடி திருமலைக்குச் செல்வர்.

இதனால், திருமலைக்கும் ஈழத்தின் ஏனைய தமிழ்ப் பகுதிகளுக்குமிடையேயான சகலவிதமான தொடர்புகளும் வளரும்; வலுவடையும்.

மாணவர்களின் நுகர்ச்சிப் பொருட்களை விற்பனை செய்வோரின் தொகை அதிகரிக்கும்.

மாணவர்களின் தேவைகளைக் கவனிப்பதற்குப் பிற இடங்களிலிருந்து பலர் சென்று திருமலையிலே குடியேறுவர்.

காலக்கிரமத்தில் திருமலை முழுக்கமுழுக்கத் தமிழ்ப் பிரதேசமாகவே மாறிவிடும்.

ஆமாம், திருமலையை மீட்பதற்கு மிகச் சிறந்த வழி அங்கே தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நிறுவுவதுதான்.

—கோவை

## "உங்கள் உரிமைப் போராட்டத்துக்கு தி. மு. க. வின் ஆதரவு என்றும் உண்டு தமிழன் நசுக்கப்படுவதை சகிக்கமாட்டோம்"

### தமிழக தி. மு. க. தலைவர்கள் உறுதி!

'இலங்கை அரசியலில் தமிழ் நாட்டுத் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு போதும் ஈடுபடாது. இலங்கையைக் கைப்பற்றும் எண்ண கனவில்கூட தி. மு. க. வுக்கு இல்லை. இலங்கை அரசியலில் ஈடுபடப் போவதாகக் கூறிக்கொள்ளும் இ. தி. மு. க. வுக்கும் எமக்கும் எந்தவிதமான தொடர்போ, ஒட்டுறவோ கிடையாது.

'இலங்கைத் தமிழ் மக்களுடன் தமிழ் நாடு தி. மு. க. கொண்டுள்ள தொடர்பு மொழியால், இனத்தால், கலாசாரத்தால் ஏற்பட்ட தொடர்பாகும். இதற்கும் அரசியலுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. இந்தக் கலாசாரத் தொடர்பினைத் துண்டிக்கும் சக்தி இந்த உலகில் யாருக்குமே கிடையாது.

'இலங்கை அரசியலில் தமிழ் நாடு தி. மு. க. ஈடு

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது தொடர்கதை




## அத்தியாயம் (10)

மிகம் பெரிய விடயங்களுக்கெல்லாம் அலைமோதாத மனம் மிகச் சிறிய அற்பமான விடயங்களில் பேதலித்து விடுகின்றது. ஒவ்வொருவர் வாழ்விலும், மனிதிலும் அனுபவரீதியாக இப்படியான நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அற்ப விடங்களுக்காக மனதை அலைபாய விட்ட முதற் சந்தர்ப்பம் பிரகாஷ் வாழ்வில் அன்றுதான் ஏற்பட்டது.

புனிதம் தன் அண்ணன் திருமணத்தன்றே, பிரகாஷின் திருமணமும் நடைபெற வேண்டும் என்று கூறிய போது அதை ஓர் அற்பவிடயமாகத்தான் நினைத்தான். ஆனால் அவள் கேட்ட கேள்விகளைக் கோர்வைப் படுத்திப் பார்த்தபோது அவளுடைய கேள்வியில் தொக்கி நின்ற பதில் என்னவாயிருக்கும் என்பதில் அவனுக்கு குழப்ப நிலையே ஏற்பட்டது.

'புனிதம் என் திருமணம் தனியே என்னைப் பொறுத்த விடய மல்லவே. அதற்குக் கீதா...' என்று இழுத்தான்.

புனிதத்துக்கு திருமணப் பதிவு நடந்து விட்டபோதும் அவள் திருமணத்துக்கு அவசரப்படுத்தியதால் சிலவேளை அவள் மனதில் புதிய சகாப்தம் ஏதும் உருவாகியிருக்குமோ என்ற நினைவினால் தான் அப்படிக் கூறினான்.

ஆனால் அவன் அப்படிக் கேட்டதும் புனிதம் கதிரையை விட்டு துள்ளி எழுந்தாள்.

'என்ன புனிதம்?'

'கீதாவைச் சம்மதிக்க வைப்பது என் பொறுப்பு. இரண்டு திருமணமும் ஒரே நாளில் ஒரே மேடையில் நடைபெறப் போகின்றது பாருங்களேன்.'

'எனக்குத் திருமணம் நடை பெறுவதில் உங்களுக்கு அவ்வளவு சந்தோஷமா?'

'ஆமாம்'

'ஏன் புனிதம்?'

'நீங்கள் திருமணமாகமலிருந்தால் தனியே தானே இருப்பீர்கள்'

'ஆமாம்'

'நீங்கள் தனியே இருக்கும் இடத்திற்கு நான் எப்படி தனியே வந்து போவதாம்.'

'புனிதம்! நீங்கள் என்ன சொன்னீர்கள்...?'

'பிரகாஷ். உங்களை நான் தவறாக நினைக்கவில்லை. உங்களோடு தனி அறையில் இரவில் கூட நான் தங்கியிருப்பேன். உங்கள் மீது அவ்வளவு நம்பிக்கை எனக்கு ஆனால்...?'

'ஆனால் என்ன புனிதம்?'

எனக்கு திருமணப்பதிவு நடைபெற்று விட்டபடியால் நான் ஒருவனின் மனைவி உங்களுடன் தனியேயிருந்து விட்டிற்குள் கதைத்தால் ஊரார் என்ன நினைப்பார்கள்?'

'புனிதம்'

'பனை மரத்தின் கீழ் நின்று பாலைப் பருகினால் யார் தான் நம்புவார்கள்? ஆகவே உங்கள் புனிதத் தன்மைக்கும், உங்கள் அன்புச் சின்னமிதி புனிதத்துக்கும் இடையூறான கதைகள் வளராதிருக்க, எங்கள் தூய்மையான அன்பு வளரவே இந்தத் திட்டத்தைத் தீட்டினேன்'

'புனிதம் நீ... பெண்ணல்ல புனிதம் நீ... நீ.. என்றான் கண்கள் கலங்கி விட்டன.

'பிரகாஷ் நீங்கள் என்னை நீ என்று ஒருமையில் அழைக்கும் போது நான் எவ்வளவு மகிழ்சிடைகின்றேன் தெரியுமா?'

'உண்மையாகவா?'

'அன்பின் நெருக்கம் இறுக இறுக மரியாதை பின் வாங்கி விடுகின்றது. அதிலிருந்து நீங்கள் நீயாக குறுகி விடுகின்றது.'

'வண்டபுல்' என்று கூறிக் கொண்டே உள்ளே வந்தாள் சுகுணா.

'அண்ணி' என்று திரும்பினாள் புனிதம்.

'போங்கள் — என்னதான் நான் உங்கள் அண்ணியானாலும் நீங்கள் எனக்கு புனிதம் அக்காதான்'

'எனக்கு தேனீர் கூடத் தரவில்லையே அண்ணி' என்றாள் புனிதம்.

'அன்பு நெருங்க நெருங்க மரியாதை குறைந்து விடுகின்றது. ஆகவே தேனீரும் இல்லை' என்றாள் சுகுணா.

''தவறு அண்ணி தவறு. இங்கே உங்களுக்கும் எனக்கும் அன்பு நெருங்கவில்லை உறவு முறையில் தான் நெருக்கம். உங்கள் அன்பு நெருங்கியுள்ள இடம் என் அண்ணனிடம்தான்'' என்றாள் புனிதம்.

சுகுணா வெட்கத்துடன் தலை குனிந்து கொண்டாள். அவள் அப்படி நேரடியே தாக்குதல் நடாத்துவாள் என்று சுகுணா கனவிலும் நினைக்கவில்லை. கேலியாகவே புனிதம் கூறினாளாயினும் சுகுணாவுக்கு வெட்கம் பிடுங்கித்தின்றது.

'என்னண்ணா நீங்கள் கூட பேசாமல் நிற்கின்றீர்களே'' என்றாள்.

''எனக்கென்ன தெரியும் இனி நீங்கள் ஒன்று நான்...''

''அண்ணா...'' என்று சிணுங்கினாள் சுகுணா.

''சரி நான் வருகின்றேன் பிரகாஷ். அண்ணிக்குச் சொல்ல வேண்டிய அவசியமேயில்லை'' என்று கூறி விட்டு விடைபெற்றாள் புனிதம்.

அவள் சென்றபின் புசுகுணா தமயனை ஒருமாதிரியாகப் பார்த்தாள்.

''என்ன சுகுணா அப்படிப் பார்க்கிறாய்?''

''புனிதம் அக்கா சொன்னது உண்மைதானா?''

''என்னவோ அவளும் சம்மதித்தால் செய்து முடிக்கட்டும்'' என்றான் பிரகாஷ்.

''நானே உன்னிடம் கேட்க வேண்டுமென்றிருந்தேன் அண்ணா. ஆனால் புனிதம் அக்கா முந்திக் கொண்டாள்' என்றாள்.

''என்னவோ சுகுணா நடக்கவேண்டிய காலத்தில நீயோ, நானோ தடுத்து நிறுத்தினாலும் நிற்கப்போவதில்லை. நடக்காமென்றால் புனிதம் முயற்சித்தாலும் நடக்காது. முதலில் உன் திருமணம் முடியட்டும்'' என்று கூறிவிட்டு படிப்பு அறைக்குச் சென்றான்.

வாழ்க்கையின் மனிதனுடைய அபிலாசைகள் எதுவுமே தோன்றும்—அழியும். அவற்றில் சில சித்தி பெறவும் கூடும். பலசாலியான ஒருவன் தொற்றுநோயால் பீடிக்கப்படுவது போன்று மனித இதயத்தில் உணர்ச்சியும் ஓர் உற்பத்திச் சாதனம். ஒருவனை மலேரியா எப்படித் தாக்குகின்றதோ அதே போன்று சிலரைக் காம உணர்ச்சி தகித்து விடுகின்றது. உடற் கூற்றைப் பற்றி விரிவாக ஆராய்ந்து படிக்கப்போயின் இது பற்றி ஓரளவு அறிவு ஆதார ரீதியாகக் கிடைக்கக்கூடும். ஆனால் எடுத்த அடுப்பில் இப்படிக் கூறிவிட்டால் அறிவுடையோரே எம்மை எள்ளிநகையாடுவர்.

சமூக ஒழுங்கு என்ற கட்டுப்பாட்டிற்குள் சிலர் ஒழுக்கமானவர்களாக வாழ்ந்தாலும் அந்தரங்கம் என்னவோ ஆயிரம இருக்கும். சிலர் இறைச்சி தின்று விட்டு எலும்பையும் கழுத்தில் கோர்த்துக்கட்டிக்கொண்டு திரிகின்றனர். ஆனால் அவர்களைப் போலல்லாது சிலர் சந்தர்ப்ப சூழலால்—?

சுதாகரைச் சந்தித்த நாள் முதலாக கீதாவின் மனதில் ஓயாத போராட்டங்கள். ஆனால் தனிமை— இரவு—அவளுக்கு பகைமையாகிவிடுகின்றன.

திமிரான பேச்சும் உறுதியான கொள்கைகளும் அப்படியான வேளைகளில அவளிடமிருந்து விடைபெற்று விடுகின்றன. அவள் எதையோ வேண்டித் துடிக்கும் ஒருத்தியாக மாறிவிடுகின்றாள்.

ஆனால் பிரகாஷ் மீது அவளுக்கு ஓர் தனிமையான பற்று. மறக்கமுடியாத வாஞ்சை அவள் எண்ணங்களின் பெருந் தலைவனாக நின்றான் பிரகாஷ்.

வாசலில் கார் ஹோண் சப்தம் கேட்டதும் வெளியே ஓடிவந்த கீதா காரிலிருந்து இறங்கிய புனிதத்தைக் கண்டதும் திகைத்து விட்டாள். ஆனால் மனதை ஒரு நிலைப்படுத்திக் கொண்டே ''வாருங்கள் ரீச்சர்'' என்று வரவேற்றாள்.

''ஓ... மிஸ்... கீதா... உங்களிடம்தான் வந்தேன். ஒரு முக்கியமான விடயம் உங்களோடு தனியாக பேசவேண்டும்'' என்றாள்.

''வாருங்கள் ரீச்சர் தாராளமாகப் பேசலாம்'' என்று அவளை அழைத்துக் கொண்டு வீட்டிற்குள்சென்றாள் கீதா.

அவளாகவே பேச்சை ஆரம்பிக்கட்டும் என்று மௌனமாகவே இருந்தாள் கீதா. கீதாவிடம் எப்படி விடயத்தை விளக்கிக் கூறுவது என்று ஆலோசித்துக் கொண்டிருந்தாள் புனிதம்.

''மிஸ் கீதா நீங்கள் மிஸ்டர் பிரகாஷ் மீது...'' என்று கேட்டுக் கொண்டே கீதாவை உற்று நோக்கிச் சிரித்தாள்.

''உங்களுக்குத் தெரியாதா ரீச்சர்''

''ஆனால் பிரகாஷ்மீது மிகுந்த அக்கறையுண்டல்லவா என்றுதான் கேட்க வந்தேன்''

''ஆமாம்''

''சுகுணாவுக்கு கல்யாணமானால் அவர்... தனித்துவிடுவார்''

''தெரிந்தது தானே''

''ஆகவே உங்கள் திருமணத்தைக் தள்ளிப்போடாமல்...''

''ரீச்சர் அவர் விருப்பத்துக்கு மாறாக நான் வற்புறுத்துவதோ கேட்பதோ அழகல்ல. ஆகவே தான் நான் இந்த விடயமாய் எதுவும் அவரிடம் கதைக்கவில்லை.

''அப்படியா?!'

''ஆமாம் ரீச்சர். எனக்கு இன்றைக்கு திருமணம் நடந்தால் கூட வேண்டாம்என்று சொல்வேன். அவரோடு இணைந்து இன்புற்று வாழும் நாளை ஆவலோடு எதிர் பார்த்திருக்கின்றேன் ரீச்சர்'' என்றாள் கீதாஞ்சலி.

''மிஸ் கீதா உங்கள் சிஸ்டரோ...''

[illegible] அவர்கள் எப்போ நான்...''

''புரிகின்றது. நீங்கள் என் சகோதரி போல ஆகவே நான் உங்களுக்கு உதவத் தயாராயிருக்கின்றேன். சுகுணாவின் திருமணத்தன்றே உங்கள்...''

''அக்கா நான் ...''

''மிஸ்டர் பிரகாஷ்கூடச் சம்மதம் தெரிவித்துவிட்டார். ஆகவே.. நிட்சயமாக சுகுணா அண்ணன் திருமணத்தன்று கீதா பிரகாஷ் திருமணமும் நடைபெறும்'' என்றாள்.

''அக்கா அக்கா என்று அவளை இறுக அணைத்துக் கொண்டே கண்ணீர் விட்டாள்.

''கீதா இனி நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டாம். எல்லாம் என்னுடைய பொறுப்பு.'' என்று கூறி விட்டுப் புறப்பட்டாள்.

''அக்கா காப்பி கூடச் சாப்பிடவில்லையே. இருங்கள் ஐந்து நிமிடத்தில் ரீ போட்டுக் கொண்டு வருகின்றேன்''

'உங்கள் அன்பு ஒன்றே போதும் கீதா. நீங்களும்பிரகாசும் ஒன்றாயிருக்கும்போது நான் அடிக்கடி வருவேன் அப்போ வட்டியும் முதலுமாகத் தந்து தீர்த்து விடுங்கள்' என்றாள் புனிதம்.

நீங்கள் ஒரு ஆணாய் பிறந்திருந்தால் என்னைப் போன்ற பெண்கள் பலர் உங்களை...' போக்கிரிப் பெண்ணே' என்று அவளைக் கட்டியணைத்துக் கொண்டாள் புனிதம்.

புனிதம் கூறிய விபரங்களைக் கேட்டது முதல் கீதாஞ்சலியின் உள்ளம் கற்பனைக் கனவு காணத் தொடங்கி விட்டது. அவள் முன்பின் அறியாத ஓர் உணர்வலைகளால் பிரகாஷின் நினைவு அவளைப் பிணைத்துக் கொண்டது.

'பிரகாஷ். உங்களோடு... வாய்விட்டே பிதற்றினாள் கீதா.

'என்னடி கீதா. 'என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள் சுவர்ணா.

'அக்கா ஒரு நல்ல செய்தி. புனிதம் ரீசசர் என்றுசொன்னேனே ஞாபகமிருக்கா?,

'ஆமாம்'

'அவர்கள் இங்கு வந்தார்கள்.'

'இதுதான் நல்ல செய்தியா'

'இல்லை அக்கா'

'பின்னே என்னவாம்?'

'புனிதம் ரீச்சருடைய அண்ணனுக்கும், பிரகாஷின் தங்கைக்கும் திருமணம் நடக்கப் போகும் அன்றே எனக்கும் பிரகாஷிற்கும் திருமணம் நடைபெறப் போகின்றது'

'யார் சொன்னது?'

'புனிதம் ரீச்சர் தான்'

'உன்னுடைய திருமண விடயமாய் புனிதம் ரீச்ச

( 6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செருப்படி

'கொள்ளற்க சொல் வேருழவர் பகை' என்று பண்டுதொட்டே சொல்லி வருகின்றனர் மண்ணோடு கல்லோடு சேர்ந்து மக்கிக் கிடங்கில் பிறந்த எமது 'சீரார்செந்தமிழ்க்காவல்' 'மண்டு'கள். (நிச்சயம் இது கள் மனிதரோடு பிறந்தது களல்ல.) பகைக் கத்தானே கூடாது அப்படி யானால் வஞ்சிக்கலாம் போலும்.

வஞ்சனையை வளர்ப்பதற்காகவென்றே இந் நாட்டில் ஒரு ,சாக்கடைப் பலகை'யுமிருக்கிறது. (சங்கப்பலகையல்ல) நிச்சயமாக அது, பெண்டில்களின், சிந்தனத்தில் இயங்குவதுமல்ல அதனால் தான் பேனு பிடித்த அத்தனை பேருமே ஆத்திரப்படவேண்டியிருக்கின்றது. அதற்கோர் சமஸ்கிருதப் பெயர் வேறு. இ. சா. ம. என்று. ('ம' என்றால், 'மண்டு' தான்)

அங்கே நடக்கின்ற ,தில்லுமுல்லு' களை அறிந்திருந்து பரிசு பெறுவதையே அவமானச்சின்னமாகஎண்ணும் நிலை ஏற்பட்டுவிட்டது.

ஈழத்து இலக்கிய உலகில் பரிசுபெற்ற ஒரு நூலை வெளி நாட்டில் காட்டினால் என்ன நடக்கும்? நிச்சயம் ஆயிரம் பகீரதன்கள தோன்றுவார்கள்.

அந்நேரத்தில் எதிர்க்குரல் எழுப்பி பகீரதன்களுக்கு பதில் கொடுப்பது யார்? மண்டலங்களா? எப்படி முடியும் 'வண்டல்களால்? குரல் கொடுப்போரும், சாதனைகளைக் காட்டுவோரும் இந்தப் புள்ளிகளால் புறக்கணிக்கப்படும் எழுத்தாளர்கள்தான்.

ஆனால் பலன்-

'வினை விதைத்தவன் தினை அறுக்கின்றான்'

இலக்கியத்தை வளர்த்து பெருநோக்கத்தை ஏற்படுத்தி வாசகர்களிடம் புத்துணர்ச்சியை எழுப்பி புதிய பாதையை வகுத்தவர்கள் புறக்கணிக்கப்படுபவர்களே.

பகீரதன்களுக்குப் பதிலளிப்பதும், புதிய சிந்தனைகளைத் தருபவர்களுமான அவர்களாலேயே ஒன்று இயலாதிருக்கின்றது. அது தான் மண்டுகளின்' பகீரதத்தனங்களை முறியடிப்பது.

இவ்வாண்டு பரிசளிப்பு எல்லாம் முடிந்த பின 'வயிற்றிலடித்த' சம்பவமொன்று நடந்தது.

சமீபத்தில் எழுத்தாளரொருவர் ஏதோ விடயமாக ஒரு கந்தோருக்குப் போனார். அவரைக்கண்ட அங்குள்ள 'பெரியவர்' அவ் 'எழுத்தாளரை' 'கன்லக்கிமேன்' என்று ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் அறிமுகப்படுத்தினார். அதன் பிறகுதான் இவ்வாண்டு தனக்கும் ஒரு இலக்கியப் பரிசு கிடைக்கவிருந்ததும் அதற்கு 'வேட்டு' வைக்கப்பட்டதும் தெரிந்தது.

'இப்படி எத்தனை நாட்கள்' இச்சம்பவங்கள் நடக்கும்?

இதில் இன்னொரு விஷயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். சிறுகதைக்கும் நாவலுக்கும் சேர்த்தே ஒரு பரிசு அளிக்கப்படுகிறது. எனவே நாவலுக்குப் பரிசளிக்கவேண்டுமானால் கட்டாயம் சிபாரிசு பண்ணப்பட்ட சிறுகதைத் தொகுதியையாவது 'தட்டத்தானே வேண்டும்.

ஊத்தை போக்கும் சவர்க்காரப் போட்டியில் கூட குறிப்பிட்ட ஸ்தாபனத்தினரோ அவர்தம் உறவினர்களோ பங்குபற்றக்கூடாது என ஒரு விதி உண்டு. ஆனால் இங்கு முன்னுரை வழங்குவோரும் ஆசிர்வதிப்போரும் 'ஜெப்ரி'களாகவிருந்தால் 'அப்படி'த்தானே நடக்கும்.

## இலக்கிய உலகு

"வேதாளம்"

இவ்விஷயம் 'பார்லிமெண்ட்' வரை போகப் போகிறது. ஆமாம். வஞ்சிக்கப்பட்ட எழுத்தாளர் ஒரு 'எம்.பி'யைப் பிடித்து நாடாளுமன்றத்திலேயே கேள்வி தொடுக்கப்போகிறார்.

களை பிடுங்கட்டும்.

இது இத்துடன் நின்றுவிடப் போகின்றதா?

நிற்கக் கூடாது!

அந்த எழுத்தாளர் குறிப்பிட்ட 'உலுத்தர் களை'க் கண்டுபிடித்து விட்டார்.

தங்கமும், ரத்தினமுமாக மட்டும் எழுத்தாளன் இருப்பதில்லை.

பேனு பிடிக்கும் காலத்தில் 'பேட்டன்' பிடிக்கப் பண்ணினால் வேறென்ன தான் பண்ணுவது?

நடக்கப் போகிறது; நிச்சயம்.

ஆமாம்! அந்த 'பெரியோரை'க் கண்டவிடத்தில் சிறிது 'கனமாக'வே கவனிப்பிக்கப் போகிறார்கள் உண்மைதான் கண்ட இடத்தில் தேய்ந்த செருப்பால் 'அர்ச்சனை' பண்ணப்போவதாக அவ்வெழுத்தாளர் குமுறைத்துள்ளாராம்.

துரோகிகளை ஜாக்கிரதை!

ஒரு கன்னத்தில் அடித்தால், மறு கன்னமும் காட்டப்பட மாட்டாது.

இது 1969




நா. கந்தையா,
ஒட்டமாவடி.

கே: தனிப்பெருந்தலைவர். சமஷ்டி கிடைப்பதால் தமிழ்ப்பகுதி பொருளாதார வளமின்றி வாடவேண்டி ஏற்படும் என்கிறாரே!

ப: இப்பொழுது மட்டும் என்ன? ஒற்றையாட்சியின் கீழ் தமிழ்ப்பகுதியில் பாலும் தேனும் ஓடுகிறதா? சமஷ்டியமைப்பின்கீழ் தமிழரசு நிறுவினால் மட்டுமே தமிழ் மக்களுக்குத் தமது பிரதேசத்தைத்தாமே ஆளும் அதிகாரம் கிடைக்கும். அந்த அதிகாரத்தை பயன்படுத்தி தமிழ்ப்பகுதியை வளம் கொழிக்கும் நாடாக்க முடியும்!

கே: அரைச் சபாநாயகர் கணிதப்படி 1948 — 1956 வரை கம்யூனிஸ்ட் காலம்— 1956 முதல் 1960வரை த. கா. காலம் — 1960 முதல் 1965வரை த. அ. க. காலம் —1965 முதல் 1970 வரை மீண்டும் த. கா. காலம்— 1970க்கு பிறகு என்ன காலம்?

ப: அரசியலிருந்து விரட்டப்பட்டு இளைப்பாறும் காலம்!

ஃ

க. நவரெத்தினம்
நெடுங்கேணி.

கே: ஈழம் என்ற இனிமையான சொல்லிலுள்ள "ஈ" தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவருக்கு பிடிக்கவில்லையாமே!

ப: ஆமாம், அடுத்த தேர்தலுக்குப்பின் "ஈ" ஒட்டவேண்டியேற்படக்கூடும் என்பதை நினைக்கும்போதே "ஈ"யைக்கண்டால் அவருக்கு அடிவயிறு கலங்குகிறதாம்!

கே: தமிழர் சுயாட்சிக் கழகத்திலிருந்து எத்தனைபேர் தேர்தலில் வெற்றி பெறுவார்கள்?

ப: கழகத்தின்தலையே தடுமாறும்போது — மூளையே கலங்கும்போது — இதென்ன உங்கள்கேள்வி?

கே: சுந்தரப்பா கட்சியில் போட்டியிட முன்வரக் கூடியவர்கள் யார்?

ப: கட்டுப்பணத்தைப்பறிகொடுக்கக தயாராக இருப்பவர்கள் அனைவரும்!

ஃ

ச. சச்சிதானந்தம்
நெடுங்கேணி.

கே: காவலூர் மக்கள் பண்டிதரிடம் வைத்திருக்கும் நம்பிக்கையை நவரத்தினத்திடம் ஏன் வைக்கவில்லை?

ப: நவரத்தினத்தை விட ஆயிரம்மடங்கு அதிகசேவையைப் பண்டிதரிடமிருந்து பெற முடியும் என்று அம்மக்கள் நம்புவதால்!

ஃ

செல்வி. சரோஜினிதேவி
நெடுங்கேணி

கே: தந்தை செல்வாவுக்கு பின்னும் தமிழரசுக்கட்சி இயங்குமா?

ப: தமிழரசுக் கட்சி தனிநபரின் சசெல்வாக்கை நம்பியிருக்கும் கட்சியல்ல; கொள்கை பலத்தை நம்பியிருக்கும்கட்சி, தமிழரசுக் கட்சி; எனவே கொள்கைப் பலம்இருக்குமட்டும் தமிழரசுக்கட்சியும் வாழும்!

ஃ

பொ. பத்மநாதன்
நெடுங்கேணி.

கே: தமிழரசார் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் [illegible] கட்டை போடுவதன் மர்மம் என்ன?

ப: இதற்குப் பெயர்தான் இனத்துரோகம்!

ஃ

முருகவேள்.
யாழ்ப்பாணம்.

கே: தமிழரசுக் கட்சியினர் வடக்கே தமிழரசுக் கட்சி என்றும் தெற்கே சமஷ்டிக் கட்சியென்றும் கூறி ஏமாற்றிவருகிறார் என்கிறாரே திரு. பொன்னம்பலம்!

ப: தமிழரசுக் கட்சியின் பெயர் இலங்கைத் தமிழரசுக்கட்சி தமிழரசுக்கட்சியின் கொள்கைஇலங்கையில்சமஷ்டியாட்சிகூட்டட தமிழரசு ஒன்றை நிறுவுதல். தமிழரசுக் கட்சி எங்கும் ஒரே குரலில்தான் பேசுகிறது. திரு. பொன்னம்பலம் தான், திருப்பித் திருப்பித் கூறியும் தமிழ் விளங்காத காரணத்தினால் அவதிபபடுகிறார்!

கே: சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்ற முதலாவது தமிழர் யார்!

ப: தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலம் தான் 1956ம் ஆண்டுசிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டு இருமாதங்களுக்கிடையிலேயே அச் சட்டத்தையேற்றுக்கொண்டுஅதன் கீழ்சலுகை பெறுவதே உசிதம் என்றுகருத்து வெளியிட்டவர் திரு. பொன்னம்பலம்' இதை அப்பொழுதே சுதந்திரன் 'போட்டோஸ்ராட்' படம்மூலம் அம்பலப்படுத்தியிருக்கிறது!

## அறிஞர் அண்ணா ஆத்திகரா நாத்திகரா?

குமரகுரு.
கொழும்பு.

கே: தாம் பூலோகத்தில் நாத்திகம் பேசி நாத்தழும்பேறி விட்டதாகவும் இனி ஆத்திகம் பேசி நாத்தழும்பு ஏறச் செய்யப் போவதாகவும் ஆவி உலகிலிருந்து அறிஞர் அண்ணா கூறியதாக எழுதியிருந்தாரே ஐயாறன் பார்த்தீர்களா?

ப: பார்த்தேன். அண்ணா உயிருடன் வாழும்போதே தாம் ஓர் நாத்திகர் என்பதையோ தமது கருத்துக்கள் நாத்திகம் என்றோ ஒப்புக்கொள்ளவில்லை. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றவர் அண்ணா. எனவே அவர் எப்படி நாத்திகராக முடியும்? தாம் ஓர் நாத்திகர் என்பதை அண்ணாவின் ஆவிகூட ஒப்புக் கொள்ளாது என்பது எனது திடமான கருத்து. அண்ணா பேசியது அத்தனையும் நாத்திகம் என்றால் நாத்திகம் பேசிய அவர் நரகத்துக்கல்லவா சென்றிருக்கவேண்டும்? எப்படி சுவர்க்கத்திலிருந்து ஐயாறனுடன் அண்ணா பேசியிருக்க முடியும்?

திருவாளர்

குயுக்தியார்

C/o. சுதந்திரன்

194, ஏ பண்டாரநாயக்க வீதி,

கொழும்பு-12.

கலப்பற்ற உயர்தர அலுமினியம்
பங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்பரேசன்
14 ஆம் வீதி, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# ஜீ. ஜீ.க்கு ஓர் அறை கூவல்!

'சமஷ்டிக் கட்சியினர் தமிழரசு ஸ்தாபிப்போம் என்றார்கள். ஆனால் ஸ்தாபித்தார்களா? தமிழரசு வந்தால் நானும் இரு கரங்களாலும் வரவேற்பேன். தமிழரசை விரும்பாதிருக்க நான் என்ன சிங்களவனா? பிரதேச சபை வருவிப்போமென்றார்கள்; மாவட்ட சபை வந்துவிட்டதென்றார்கள். ஒன்றுமே வரவில்லை. பொதுமக்களை ஏமாற்றியதுதான் சமஷ்டி கண்ட மிச்சம்'

—தமிழ் காங்கிரஸ் தலைவர் திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் மல்லாகம் என்னுமிடத்தில் மேற்கண்டவாறு பேசியிருப்பதாக சென்றவாரம் தமிழ்த் தினசரியொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

தமிழ் பேசும் மக்கள் ஒன்றும் தெரியாத அப்பாவிகள்—அரசியல் அரிச்சுவடிகூட புரியாத நிர் மூடர்கள் என்று திரு. பொன்னம்பலம் கருதியிருக்காவிட்டால் இப்படியொரு பேச்சைத் துணிந்து நிகழ்த்தியிருக்கவும் முடியாது.

பரத்தை பத்தினிவேடம் போட்டதுபோல்—கசாப்புக் கடைக்காரன் காருண்யம் பற்றிக்கதை அளந்ததுபோல்—தமிழ் காங்கிரஸ் தலைவரும் வாயில் வந்தபடி கதையளந்து தனது துரோகப் படலங்களை மூடி மறைத்து தமிழ் பேசும் மக்களை ஏமாற்றிவிட நினைக்கிறார்போலும்!

ஆனால் அந்தக்காலம் மலையேறிவிட்டதென்பதையும் அரசியல் விழிப்புணர்ச்சி கொண்ட தமிழ் மக்களிடம் எத்தர்களுக்கும் ஏமாற்றுக்காரர்களுக்கும் இடமில்லையென்பதையும் திரு. பொன்னம்பலம் இன்னும்கூட உணர்ந்ததாகத் தெரியவில்லை.

இந்நாட்டிலே 1956ம் ஆண்டிலிருந்து தமிழ் பேசும் இனத்தின் இழந்த உரிமைகளை மீண்டும் நிலைநாட்டுவதற்கு தமிழரசுக் கட்சி எந்த நடவடிக்கையெடுத்தாலும் அதற்கெல்லாம் தடைக் கல்லாக குறுக்கே நின்று கலக்குத்திய 'பெருமை'க் குரியவர் யார்?

தமிழினத்தை ஒன்றுதிரட்டி தமிழுரிமைப் போராட்டத்தை தமிழரசுக் கட்சி நடத்திய நேரங்களில் எல்லாம் ஐந்தாம் படையாக நின்று போராட்டத்தை கேலி பேசி காட்டிக்கொடுத்து முதுகில் குத்திய துரோகி யார்?

தமிழினத்தின் எந்த வொரு பிரச்சினையை எடுத்தாலும்—அது அற்ப பிரச்சினையாக இருந்தால் கூட — தமிழரசுக் கட்சியுடன் அப் பிரச்சினை மீது மல்லுக்கட்டி நின்று தமிழினத்தின் ஐக்கியத்துக்கு வேட்டு வைத்து வருவது யார்?

1957 ம் ஆண்டு பண்டா ஆட்சியைப் பணிய வைத்து—தமிழ் பகுதிக்கு மாநில சுயாட்சியுள்ள பிரதேச சபைகளை உருவாக்குவதற்கு தமிழரசுக்கட்சி ஒப்பந்தம் செய்தபோது அந்த ஒப்பந்தத்துக்கு எதிராக யூ. என். பி: யுடன் சேர்ந்து கொண்டு நாட்டில் எதிர்ப்புப் பிரச்சாரம் நடத்தி ஒப்பந்தம் கிழித்தெறியப்படக் காரணமாக இருந்தவர் யார்? இனத்திற்கு கிடைக்கவிருந்த பெரு நன்மையை கிடைக்கவிடாமல் தட்டிக் கொட்டியது யார்?

தேசிய அரசுமூலம் மாவட்ட சபைகளையாவது நிறுவ தமிழரசுக்கட்சி முழுமுயற்சியெடுத்து மசோதாவும் தயாரிக்கச் செய்யுமளவுக்கு வெற்றி கண்ட நேரத்தில்—மாவட்டசபைக்கு எதிராக சிங்கள இன வெறியருடன் சேர்ந்து கொண்டு பிரச்சாரம் செய்து அதைக் குட்டிச்சுவராக்கிய "சாதனையில்" பங்கு பெறுபவர் யார்?

தமிழரசுக் கட்சி தமிழ் இனத்துக்கு எந்த நன்மையையாவது பெற்றுக் கொடுப்பதற்கு தடையாக — அரசியல் நந்தியாக இன்று இருந்து வருவது யார்?

இக்கேள்விகளுக்கு எல்லாம் ஒரே பதில் தமிழ் காங்கிரஸ் தலைவர் திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் என்பது தமிழ் மக்கள் அறிந்த இரகசியமாகும்.

இப்படிப்பட்ட "விராதி விரர்" தான்—பக்தா இது என்ன பூலோகமா என்று கேட்டவனைப்போல் — உருத்திராட்சப் பூனைபோல்—தமிழரசுக் கட்சியிடம் பிரதேச சபை எங்கே என்று கேட்டிருக்கிறார்!

பிரதேசசபை, மாவட்டசபை போன்றவை வராமற் போனதற்கு யார் காரணம் என்பதை திரு. பொன்னம்பலம் தனது மனச்சாட்சியிடமே கேட்டுப் பார்க்கட்டும். அவரது மனச்சாட்சியே அவருக்கு சுடச்சுட பதிலளிக்கும்.

மாவட்டசபையோ சமஷ்டியோ தமிழ்மக்களுக்கு நன்மை பயக்கும் என்று திரு பொன்னம்பலம் அந்தரங்கசுத்தியுடன் உள்ளபடியே நம்புவாரானால், அவை வராமற்போனதற்கு அவர் மகிழ்ச்சியடையவல்லவா வேண்டும்? அதைவிடுத்து மாவட்டசபை கொண்டுவருவதாகத் தமிழரசுக் கட்சி கூறியதே — எங்கே மாவட்டசபை — எங்கே தமிழரசு—என்று திரு. பொன்னம்பலம் கேட்கிறாரென்றால் தமிழரசு நிறுவுவதை — அல்லது மாவட்டசபை நிறுவுவதை அவர் உள்ளூர விரும்புகிறாரென்பது தெளிவாகிறதல்லவா?

தமிழரசுக்கட்சியின் தமிழரசுக் கோரிக்கைக்கும், பிரதேசசபை அல்லது மாவட்டசபை நிறுவும் அதன் செயற்திட்டங்களுக்கும் எதிராக நாட்டில் பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு பிரதேசசபை அல்லது மாவட்டசபைகளை நிறுவுவதற்கு இதுவரை முட்டுக்கட்டை போட்டுவந்த திரு. பொன்னம்பலம், எதிர்காலத்திலாவது தனது இத்தவறான போக்கை உணர்ந்து திருந்துவாரா? தமிழரசுக்கட்சியுடன் சேர்ந்து தமிழினத்தின் சுதந்திரத்திற்காகப் போராட முன் வருவாரா என்று கேட்கவிரும்புகிறோம்.

'தமிழரசை விரும்பாதிருக்க நான் என்ன சிங்களவனா? தமிழரசு வந்தால் நானும் இருகரங்களாலும் வரவேற்பேன்' என்று திரு. பொன்னம்பலம் கூறியிருப்பது அவரது அந்தராத்மாவின் கூற்றாக இருந்தால் — ஒற்றையாட்சிக்கு துதிபாடும் தனது இன்றைய ஆபத்தான கொள்கைக்கு முழுக்குப் போட்டுவிட்டு தமிழ்ப் பகுதிக்கு சமஷ்டியரசியல் [illegible] தமிழ் அரசை நிறுவுவதற்கு தமிழரசுக் கட்சியுடன் ஒன்று சேர்ந்து உழைக்க முன் வரும்படி அன்புடன் அழைக்கிறோம்.

# தமிழரசிலிருந்து பிரிந்ததற்கு நவரத்தினம் கூறும் காரணம் பொருத்தமானதா?

பூரண பிரஜாவுரிமையுடன் வாழ்ந்துவந்த 10 இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களிடமிருந்து அவ்வுரிமையைப் பறித்து அவர்களை அரசியல் அனாதைகளாக—நாடற்றவர்களாக ஆக்குவதற்கு காரணமாயமைந்த சட்டங்களை திரு. பொன்னம்பலம் ஆதரித்ததை எதிர்த்தும்—

மலைநாட்டுத் தமிழர்களின் ஏகபோக ஸ்தாபனமாக அன்றுவிளங்கிய இலங்கைஇந்திய காங்கிரசுக்கு கையெழுத்திட்டு எழுத்தில் கொடுத்த ஒப்பந்தத்தை திரு. பொன்னம்பலம் காற்றில் பறக்கவிட்டதை ஆட்சேபித்தும்—

எந்த ஒற்றையாட்சித்திட்டத்தை எதிர்த்து போராடுவதற்கென தமிழ்காங்கிரஸ் உருவாக்கப்பட்டதோ—அதே ஒற்றையாட்சித்திட்டத்திடம் திரு. பொன்னம்பலம் சரணடைந்ததினால் ஏற்பட்ட தத்துவ மோதலாலும்—

1949ம் ஆண்டு தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் தமிழ்காங்கிரசிலிருந்து வெளியேற நேரிட்டது.

திரு. செல்வநாயகம் மட்டும் தன்னந்தனியனாக வெளியேறவில்லை— திரு. வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன், பரமநாயகம் போன்ற எண்ணற்ற தமிழ்காங்கிரஸ்காரர்கள் திரு. செல்வநாயகத்தைப் பின்பற்றினார்கள்.

எனவே திரு. செல்வநாயகம் 1949ம் ஆண்டு தமிழ்காங்கிரசிலிருந்து வெளியேறி தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்ததற்கு போதுமான அரசியல் காரணங்கள் இருந்தன. புதிய கட்சி ஒன்றுக்கான அரசியல் தேவையிருந்தது. அதனால் தான் தமிழரசுக்கட்சி வளர்ச்சியடையவும் முடிந்தது:

1949ம் ஆண்டு தமிழ்காங்கிரசிலிருந்து திரு. செல்வநாயகம் பிரிந்ததும் தமிழரசு கட்சியிலிருந்து இன்று தாம வெளியேறியதும் ஒரே காரணங்களுக்காகத்தான் என்று சுயாட்சிக்கழகம் அமைத்து அதன் தலைவராகியுள்ள திரு. வி. நவரத்தினம் கூறியிருக்கிறார்.

தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகத்தைசாட்சிக்கு வைத்தாவது தமது அரசியல் துரோகத்தனத்துக்கு மூலாம் பூச முடியாதா என்ற ஏக்கத்திலேயே திரு. நவரத்தினம் இப்படி ஒரு காரணத்தை கட்டிவிடப் பார்க்கிறார்!

கட்டப்படும் காரணங்கள் எல்லாம் காரணங்கள் ஆக முடியாது!

1949ம் ஆண்டு தமிழ்காங்கிரசிலிருந்து திரு. செல்வநாயகம் வெளியேற வேண்டியேற்பட்டதற்கு ஓர் முக்கிய காரணம் மலைநாட்டுக்தமிழர்களுக்கு தமிழ்காங்கிரஸ் செய்ததுரோகத்தனமாகும்.

ஆனால் மலைநாட்டுத்தமிழர்பிரச்சினையில் திரு. நவரத்தினம் தமிழரசுக் கட்சியுடன் கருத்துவேறுபாடு கொண்டுதான் கட்சியிலிருந்து வெளியேறினாரா?

ஒருபோதுமில்லை!

மலைநாட்டுத்தமிழர் சம்பந்தப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்த நடைமுறைச சட்டத்தை தமிழரசுக்கட்சி ஆதரித்த பின்னரும் அவர் நீண்டகாலம் தமிழரசுக்கட்சியிலேயே உறுப்பினராக இருந்தார்.

## [redacted] 'எஸ்ஸாரெம்'

இதை திரு. நவரத்தினம் ஒருபோதும் மறுக்க முடியாது!

மலைநாட்டுத்தமிழர் பிரச்சினையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகத் தான் திரு. நவரத்தினம் தமிழரசுக்கட்சியை விட்டு வெளியேறியதாகக் கூறுவது உண்மையானால், அவர் இலங்கை இந்திய ஒப்பந்தச் சட்டத்தை தமிழரசுக்கட்சி ஆதரித்த அன்றே வெளியேறியிருக்கவேண்டுமே! ஏன் வெளியேறவில்லை?

மலைநாட்டு மக்களுக்கு உழைப்பதற்காக மலையகத்தில் தமிழரசுக்கட்சி தொழிற்சங்கம் தொடங்குவதைக் கூட எதிர்த்து தமிழரசுக்கட்சியிலிருந்துவெளியேறி ஒதுங்கியிருந்த திரு. நவரத்தினம் மலைநாட்டுத் தமிழர்களுக்காக இன்று கண்ணீர் வடிப்பது பெரிய அரசியல் வேடிக்கையாகும்!

திரு. செல்வநாயகம் 1949ம் ஆண்டு தமிழ்காங்கிரசிலிருந்து வெளியேறியதற்கு மற்றோர் அடிப்படைக் காரணம் ஒற்றையாட்சி அமைப்பை ஏற்றுக்கொள்வதென்று திரு. பொன்னம்பலம் செய்த முடிவாகும்!

ஆனால் தமிழரசுக்கட்சி தனது அடிப்படைக் கொள்கையான சமஷ்டி அரசியலைக் கைவிடவும் இல்லை; ஒற்றை ஆட்சியை ஏற்கவும் இல்லை.

எனவே திரு. நவரத்தினம் தமிழரசுக்கட்சியை விட்டு வெளியேறியதற்கு அடிப்படைக் கொள்கையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு என்றும் கூறமுடியாது.

நவரத்தினம் கூற்றுப்படி பார்த்தாலும் 1949ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டங்களும் தமிழரசுக்கட்சியினதும் மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளினதும் ஆதரவுடன் கொண்டுவரப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டமும் ஒத் தன்மையானதா?

ஒன்று நோய்: மற்றது அதற்கு மருந்து.

அன்று கொண்டுவரப்பட்ட சட்டம் 10 இலட்சம் மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்கியது!

இன்று வந்துள்ள சட்டம் கட்டாயம் ஏதுமின்றி தாமே விரும்பி இந்தியப் பிரஜாவுரிமையை ஏழு இந்திய வம்சாவழியினர் ஏற்றுக்கொண்டால், நான்கு இந்திய வம்சாவழியினருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது.

இந்தியா செல்ல தாமே தம்மிஷ்டப்படி விரும்பி முன்வராத எவரையும் இலங்கை அரசு பலவந்தமாக நாடு கடத்திவிட முடியாது!

எனவே இந்நாட்டையே தாயகமாகக்கொண்டு வாழ விரும்பாமல்—தமிழ் நாட்டில் சென்று வாழ விரும்புபவர்களே இந்தியப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் இந்தியப் பிரஜாவுரிமையை ஏற்கும் போது ஒவ்வொரு ஏழு பேருக்கும் நாலு பேர் வீதம் இலங்கையைத் தாயகமாகக்கொண்டு வாழ விரும்பும் மலையக மக்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை கிடைக்கிறது; கிடைக்க வேண்டும்.

இதனால் 'நாடற்ற மக்கள்' என்ற அவப்பெயர் சில இலட்சம் தமிழ்த்தொழிலாளர்களுக்கு என்றாலும் நீங்குகிறது!

பொன்னம்பலம் ஆதரித்த சட்டங்களால் நாடற்றவர்களாக்கப்பட்ட மலையக தமிழர்களில் ஒருபகுதியினருக்கு இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டப்படி பிரஜாவுரிமை கிடைக்க வழிவகை ஏற்படுகிறது.

இதனால்தான் தமிழரசுக் கட்சியும் இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தை ஆதரிக்க முடிவு செய்தது:

மலைநாட்டு தமிழர்களின் பிரதிநிதிகளும் ஆதரித்தனர்.

தமிழர்களின் நலன் ஒன்றே குறியாகக் கொண்ட தமிழ் நாட்டுத் திராவிட முன்னேற்றக் கழகமும் ஆதரிக்கிறது!

இலங்கையையே தாய் நாடாகக் கொண்டு வாழ விரும்பாத எவரையும் இலங்கையிலே தடுத்து நிறுத்த வேண்டுமென்று தமிழரசுக்கட்சி ஒருபோதும் கூறியதில்லை

இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தின் கீழ் இலங்கையை தாயகமாகக் கொண்டு வாழ விரும்பாதவர்களே இந்தியப் பிரஜைகளாகத் தங்களைப் பதிவு

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய ஊழியர்களின் முதுமுறைப் பிரச்சினை:

# நாம் சலுகை கோரவில்லை!

## 701வது சுற்றறிக்கையை சரியாக அமுல் நடத்தும்படியே கேட்கிறோம்!

### பிரதமருக்கு தமிழரசுத் தந்தை கடிதம்!



1965 ஜூலை முதலாந் திகதியிலிருந்து அளிக்கப்பட்ட மூன்றுண்டு கால எல்லைக்குள் சிங்களத்தில் தேர்ச்சியடைந்த புதிய அரசாங்க ஊழியர்களின் முதுமுறை சம்பந்தப்பட்ட பிரச்சினை ஒன்று தோன்றியுள்ளது.

திறைச்சேரியின் 701 வது சுற்றறிக்கை, புதிய அரசாங்க ஊழியர்களை சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டிய காலத்தவணையை 1965 ம் ஆண்டு ஜூலை முதலாந் திகதியிலிருந்து மேலும் மூன்றுண்டுகளுக்கு நீடித்திருந்தது.

இப்புதிய அரசாங்கஊழியர்கள், குறிக்கப்பட்ட காலத்தவணைக்குள் தம் சிங்களத் தேர்ச்சி பரீட்சையில் சித்தியடைந்து விட்டதாகவும் ஆகையால் தமது முதுமுறை அரசாங்க சேவையில் தாம் சேர்ந்த திகதியிலிருந்தே கணிக்கப் படவேண்டுமென்றும் கோருகிறார்கள்!

ஆனல் இவர்களது முதுமுறை கணிப்புதிகதியை இவர்கள் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைந்த திகதியிலிருந்து குறிப்பிடும் 769 வது சுற்றறிக்கை யொன்றை திறைசேரிவெளியிட்டுள்ளது. இச்சுற்றறிக்கை 121 வது நிர்வாக சட்டவிதியின் 2வது உபவிதியை ஆதாரமாக கொண்டு இருக்கிறது.

1965 ஜூலை முதல் திகதியிலிருந்து நீடிக்கப்பட்ட மூன்றுண்டு காலத்தவணைக்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெறத்தவறும் புதிய அரசாங்கஊழியர்கள் விடயத்தில் மட்டுமே நிர்வாக விதி (121) உபவிதி (2) அனுசரிக்கப்படவேண்டுமென 701 வது திறைசேரி சுற்றறிக்கை தெளிவாக கூறுகிறது. 1965 ஜூலை முதல் திகதியிலிருந்து நீடிக்கப்பட்ட மூன்றுண்டு காலத்துள் சிங்கள தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு இந்த விதியை பிரயோகிக்க முடியாது.

திறைச்சேரியின் 769 வது சுற்றறிக்கை குறித்து தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் பிரதமருக்கு எழுதியுள்ள ஓர் கடிதத்தில் இக்கேள்வியை எழுப்பியுள்ளார். இதை ஒரு சலுகையாக செய்யும்படி நாம் கோரவில்லை ஆனல் 701 வது திறைசேரி சுற்றறிக்கையை சரியாக விளங்கிக் கொள்ளும்படிதான் கோருகிறோம்; என்றும் திரு.செல்வநாயகம் பிரதமருக்கு எழுதியுள்ளார்.

#### கடிதம்

திரு. செல்வநாயகம் எழுதியுள்ள கடிதத்தின் முழுவிபரம் வருமாறு,—

1965 ம் ஆண்டு நீங்கள் உங்கள் அரசாங்கத்தை அமைத்தபோது, தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினையிலும் அவர்களது சிங்களத் தேர்ச்சி குறித்தும் உங்களுக்கும் எமக்கும் ஓர் அரசியல் உடன்பாடு ஏற்பட்டது.

(அ) பழைய அரசாங்க ஊழியர்கள் சிங்களத்தில் தேர்ச்சியடையும்படிகோரப்பட மாட்டார்கள் என்றும்

(ஆ) புதிய அரசாங்க ஊழியர்கள் சிங்களத் தேர்ச்சி பெறுவதற்கு 1—7—65 முதல் மேலும் மூன்றுண்டு காலம் அளிப்பது என்றும் உடன்பாடு காணப்பட்டது.

நீடிக்கப்பட்ட குறித்த மூன்றுண்டு காலத்தவணைக்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெறும் புதிய அரசாங்க ஊழியர்கள், அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்ட மூன்றுண்டுகளுக்குள் சிங்களத்தில் தேர்ச்சியடைந்திருந்தால் எப்படி கணிக்கப்படுவார்களோ அப்படியே கணிக்கப்படுவார்கள் என்றும் தீர்மானிக்கப்பட்டது. நியமனம் வழங்கப்பட்ட மூன்றுண்டு காலத்துள் சிங்களத் தேர்ச்சி பெருத காரணத்துக்காக அவர்கள் எவ்வித தொல்லைகளையும் அனுபவிக்கவேண்டியதில்லை என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த உடன்படிக்கையின் பெறுபேறுகள் 701 வது திறைசேரிச் சுற்றறிக்கையின் 2 C பந்தியில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:

'1956 செப்டம்பர் 24ந் திகதிக்கும் 1965 ஜூன் 30ம் திகதிக்கு மிடைப்பட்ட காலத்தில் நியமனம் செய்யப்பட்ட புதிய அரசாங்க ஊழியர்கள்.

'தேவைப்பட்ட சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைகளில் தேருமலும் தங்கள் பதவிகளில் உறுதிப்படுத்தப்படாமலும் இருக்கும் புதிய ஊழியர்களின் நிலை ஆராயப்பட்டு பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

(1) 1965 ஜூலை முதல் தேதியிலிருந்து மேலும் மூன்றுண்டு காலத்துள் உத்தியோக மொழியான சிங்களத்தில் தேர்ச்சி பெறும்படி அவர்கள் கோரப்படுவார்கள்.'

மீண்டும் பந்தி 2 C (V) பின்வருமாறு கூறுகிறது:—

'மேலே பந்தி 2 (C) 5ல் கூறப்பட்ட பிரகாரம், கொடுக்கப்பட்ட மேலதிக கால எல்லைக்குள், உறுதிப்படுத்துவதற்கு தேவையான அளவு சிங்களத் தேர்ச்சியை ஊழியர்கள் பெறுவார்களானல், பின்னேக்கப்பட்ட நிலையிலிருந்து பதவியில் உறுதிப்படுத்தப்படும் தகுதியைப் பெறுவார்கள்.'

இதன்படி, சிங்களத்தில் தேவையான அளவு தேர்ச்சி பெற்றவர்கள் நியமனம் பெற்ற திகதியிலிருந்தே பதவிகளில் உறுதிப்படுத்தப்பட்டு சம்பள உயர்வுகளும் வழங்கப்பட்டு இருக்கிறது. 2C (V) பந்தியிலுள்ள இறுதி வசனம் பின்வருமாறு கூறுகிறது:— 'அவர்களது முதுமுறை சம்பந்தப்பட்ட அதிகார பீடத்தால் தீர்மானிக்கப்படும்.'

நியமனத் திகதியே உறுதிப் படுத்தப்படும் திகதியாகவும் ஏற்கப்பட்டிருப்பது போல அவர்களது முதுமுறையும் நியமனத் திகதியிலிருந்தே கணிக்கப்படும் என்று நான் இதை கருதிக் கொண்டேன்.

1960 ஜூலை முதல் தேதியில் சேவையில் சேரும் ஓர் ஊழியர், நியமனம் கிடைத்து மூன்றுண்டுகளுக்குள் சிங்களத் தேர்ச்சி பெற்று

(6ம் பக்கம் பார்க்க)

# பீட்டர் கெனமனே பிதற்றலை நிறுத்து!

'இழந்த உரிமைகளை மீட்கப் போராட்டம் நடத்திய தமிழ் மக்களுக்கு கிடைத்தவை வறுமையும் வேலையில்லாத திண்டாட்டமும் தான். தமிழினத்துக்கு தமிழரசுக் கட்சி அளித்த வாக்குறுதிகள் எல்லாம் பொய்யாகி விட்டன—'

—இவ்வாறு வட பகுதியில் எங்கோ ஓர் கூட்டத்தில் நின்று பிதற்றியிருக்கிறார், தோழர் பீட்டர் கெனமன்.



தமிழ் மக்களை வெறும் பேயர்கள்—பித்தர்கள் அரசியல் விவேகமற்ற மண்டுகங்கள் என்று எண்ணியிராவிட்டால் திரு. பீட்டர் கெனமன் இப்படியொரு பேச்சை நிகழ்த்தியிருக்கவும் முடியாது!

சாயப்போன கம்யூனிஸ்டான தோழர் கெனமனுக்கு தமிழ் மண்ணில் இனியும் என்ன வேலையிருக்கிறதென்று நமக்குப் புரியவில்லை!

1966ம் ஆண்டு தமிழ் மொழிப் பிரமாணங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது குறித்த பிரமாணங்கள் மூலம் சிங்கள மொழிக்குரிய உரிமையிலும் தமிழுக்கு அதிக உரிமை அளிக்கப்படுவதாக கூறி அதை எதிர்த்து சிங்கள வெறிக்கு தூபமிட்டவர் இதே பீட்டர் கெனமன் தான்!

மிகவும் கேவலமாமாக—தோசை வடை நல்லெண்ணைக் கோஷமெழுப்பி தமிழர்களை இகழ்ந்தவர்கள் இவரது கட்சியினரும் தோழமைக் கட்சிகளும்தான்!

இவையெல்லாம் தமிழர் நெஞ்சை விட்டகலாத—அகல முடியாத நிகழ்ச்சிகள்!

வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் தமிழர்களிடம் மட்டுந்தான் உண்டா? சிங்களவர்களிடம் இல்லையா?

நாடு முழுவதும் உள்ள ஓர் பொதுப் பிரச்சினையை—உரிமைக்காகப் போராடியதால் தமிழர்கள் மட்டுமே அனுபவிப்பதாக முதலைக் கண்ணீர் வடிப்பது எதற்காக?

வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை—இவையிரண்டையும் காட்டி தமிழர்களின் மொழி, இனப் போராட்டத்தை முறியடித்துவிடலாம் என்ற நோக்கமா?

கம்யூனிஸ்டுகளாகிய உங்களுக்கு சோறுதான் சொர்க்கம்! சோறுதான் தெய்வம்!

ஆனல் தமிழர்களாகிய எமக்கு சோற்றைவிட மானம்தான் பெரிது! சோற்றுக்காக மானத்தை இழக்க மாட்டோம்!

நடைபெறும் தமிழுரிமைப் போராட்டங்கள் நம் இனத்தின் மானத்தைக்காப்பாற்றும் போராட்டங்கள்!

கம்யூனிஸ்டுகளான உங்களுக்கும் மானத்துக்கும் வெகுதூரம்!

தமிழரசுக்கட்சி தமிழ் மக்களுக்கு கொடுத்த எந்த வாக்குறுதியையும் கைவிடவில்லை!

இந் நாட்டில் தமிழுக்கும், தமிழர்களுக்கும் சம அந்தஸ்து—சமவாய்ப்பு—சம உரிமை தரும் சமஷ்டி அரசியலை அமைப்பதற்கு பணியாற்றுவதே தமிழரசுக் கட்சி ஏற்றுக்கொண்ட பொறுப்பாகும்!

அந்தப் பொறுப்பினை தமிழரசுக்கட்சி கண்ணும் கருத்துமாக நிறைவேற்றிவருகிறது. உங்களுக்கு அந்தக் கவலை தேவையில்லை.

மாவட்டசபை கிடைக்காமற் போனதற்கு தமிழ்த் தலைவர்களின் ஒற்றுமையின்மையே காரணம் என வெறு பிரலாபித்திருக்கிறீர்கள்!

மாவட்ட சபை நிறுவுதற்கு தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலமும் அவரது வால்களும் தடைக்கல்லாக நின்றார்கள என்பது நூற்றுக்கு நூறு உண்மை!

ஆனல் உங்கள் நிலைமை என்ன? நெஞ்சிலே கைவைத்துச் சொல்லுங்கள்!

நீங்களும், உங்கள் கூட்டுக்கட்சிகளும் மாவட்ட சபைக்கு எதிராக சிங்கள இனவெறியை கிளப்பி நாட்டிலே நடத்திய துவேஷப் பிரசாரங்கள் எத்தனை...... அப்பப்பா......

எல்லாவற்றையுமே மறந்துவிட்டீர்களா?

மாவட்டசபை ஏற்பட்டால் தமிழரசுக்கட்சி நாட்டைப் பிளவுபடுத்திவிடுமென்றும் தமிழ் நாடு இலங்கை மீது படையெடுக்குமென்றும் எத்தனை பொய்ப்பிரச்சாரம் செய்தீர்கள்!

பிரதேச சுயாட்சிக் கொள்கையை ஒருகாலத்தில் ஒப்புக்கொண்டிருந்த நீங்களே சாதாரணமாவட்ட சபைகளுக்கு எதிராக கச்சை கட்டி அதை வரவிடாமல் தடுத்தீர்கள்!

மாவட்டசபை மசோதா வரவிடாமற் தடுத்ததில் பெரும் பங்கு உங்களுக்கும் ஏனைய கூட்டுக்கட்சிகளுக்கும் உண்டென்பதை இப்போது ஒப்புக்கொள்கிறீர்களா?

அரசியல் நோக்கத்துடன்— அரசியல் இலாபத்துக்காக மாவட்டசபை மசோதாவுக்கு எதிராக துவேஷப் பிரசாரம் செய்து அதைவரவிடாமல் தடுத்து தமிழ்மக்களுக்கு கிடைக்கவிருந்த நன்மையில் மண்ணை அள்ளிப் போட்ட நீங்கள் இப்போது அதே தமிழ்மக்களுக்காக கண்ணீர் வடிக்கிறீர்களா?

வேண்டாம்!... வேண்டாம்!!

தேர்தல் வரும்போது தமிழ்மக்களுக்காக நீங்கள் நீலிக் கண்ணீர் வடிக்கவேண்டாம்!

நீங்கள் செய்ததெல்லாம் தவறு என்று உங்கள் இதயம் உண்மையிலேயே உங்களுக்கு இடித்துரைத்தால்—பொதுவுடமைச் சித்தாந்தத்தைப் புதைகுழிக்கு அனுப்பிவிட்டு வடிகட்டிய வகுப்புவாதம் பேசிய குற்றத்துக்காக உங்கள் தலைவர் லெனின் கல்லறைக்கு முன்னல் நின்று கண்ணீர் விட்டுக் கதறியழுங்கள்!

—கோவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக்கட்சி சாதித்

1948 ஆண்டு திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் மந்திரிப்ப தவி மயக்கத்தில் வீழ்ந்து மலைநாட்டுத்தமிழர்களுக்கு எழுத்தில் கொடுத்த உறுதிமொழிகளை மீறி-10 இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களை நாடற்றவராக்கும் சட்டங்களை ஆதரித்து தமிழினத்தின் முதுகில் குத்திய நேரத்தில்—தமிழ் மக்கள் அரசியல் அந்தகாரத்தில் சிக்கித் தவித்த போது—அவர்களுக்கு துணிச்சலுடன் வழிகாட்ட முன் வந்த கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

ஒற்றையாட்சி அரசியலமைப்புத்திட்டத்தின் கீழ் தமிழ் பேசும் மக்கள் சிங்கள மக்களின் அடிமைகளாக என்றென்றும் அல்லல் பட வேண்டியதில்லை—சமஷ்டி அரசியல் அமைப்பின் கீழ் தமிழ்ப்பகுதிக்கு சுயாட்சி உரிமை கோருவோம் என்று இனத்துக்கு புதியபாதையைக்காட்டி உரிமை முழக்கம் எழுப்பிய கட்சி—அந்த இலட்சியத்துக்காகப் போராடிவரும்கட்சி —எந்தக்கட்சி?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

ஈழத்தமிழ் பேசும் மக்கள் தம்மொழி வழிப்பட்ட இன ஒற்றுமையை மறந்து—இந்து இஸ்லாமியர் கிறிஸ்தவர் என்று மத வேற்றுமைகளாலும், மட்டக்களப்பு, மலைநாடு, யாழ்ப்பாணம், திருமலை, வன்னி என்று பிரதேச வேறுபாடுகளாலும் கூறுபட்டு நின்ற நேரத்தில் அவர்களையெல்லாம் ஒரே கொள்கையின் கீழ் ஒரே தலைவனின் கீழ்—ஒன்றாகப் பிணைந்து—சக்தி வாய்ந்த தேசிய சிறுபான்மை இனமாக கட்டி யெழுப்பியது எந்தக்கட்சி?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

தமிழினத்தை கூறுபோட்டு அதன் மூலம் அரசியல் சுகபோகங்களை அனுபவித்துக்கொண்டு சிங்கள ஆட்சிக்கு தமிழ் மக்களை விலை கூறிவிற்று வந்த எட்டப்பர்களின் முக மூடிகளை யெல்லாம் கிழித்தெறிந்து மக்கள் முன் அவர்களது சுய உருவத்தை அம்பலப்படுத்தியது எந்தக் கட்சி?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

சேர். பொன் இராமநாதன், சேர். அருணாசலம் போன்ற தலைவர்களாலேயே உருவாக்க முடியாத தமிழ் இன ஒற்றுமையை—ஒன்று பட்ட உணர்ச்சியை விடுதலை வேட்கையை வளர்த்து விட்டிருக்கும் கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

சீமான்களிடத்திலும், பூமான்களிடத்திலும் சிக்கிக் கொண்டிருந்த ஈழத்தமிழ் நாட்டு அரசியலை, சாதாரண தமிழ் மக்களிடம் கொண்டு வந்து—அரசியல் விழிப்பை ஏற்படுத்திய கட்சி எது? அரண்மனையிலிருந்த ஈழத் தமிழ் நாட்டு அரசியலை ஆலமரத்தடிக்கு கொண்டு வந்த கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

பாராளுமன்றத்துக்கு செல்வது சிங்களத் தலைவர்களிடம் சரணடைந்து அரை முழு மந்திரிப்பதவிகளைப் பெற்று, தமிழ்ப் பகுதிக்கு அற்ப சலுகைகளை—பாலங்களையும் மதகுகளையும், அஞ்சல் அலுவலகங்களையும்—பெறுவதற்குத் தான் என்றசித்தாந்தத்தை மாற்றியமைத்து—பாராளுமன்றத்துக்கு செல்வது தமிழினத்தின் விடுதலைக்குரலை எழுப்புவதற்கு—தமிழுரிமை முழக்கம் செய்வதற்கு—இனத்துக்கு ஏற்படும் ஆபத்துக்களை எதிர்த்துப் போராடுவதற்கு—என்ற நிலையை தோற்றுவித்தது எந்தக்கட்சி?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றப் பிரதிநிதிகளானவர்கள்-அமைச்சர்களானவர்கள்—திமிர் பிடித்து மக்களை மதிக்காது அகந்தை கொண்டு அலைந்த நிலையை மாற்றியமைத்து—பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் தொண்டர்கள் —மக்களால் உருவாக்கப்பட்டவர்கள். மக்களுக்காக தேவைப்படும் போது அடிபடவும் உதைபடவும், சிறைப்படவும் சித்திரவதைப் படவும் தயாராக இருக்கிறார்கள் என்பதையதார்த்த பூர்வமாக நிருபித்துக் காட்டிய கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக் கட்சி!

தமிழ்ப்பகுதியை சிங்கள மயமாக்குவதற்கு யூ. என். பி. தீட்டிய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் பேராபத்தினை உணர்ந்து தமிழ் பேசும் மக்களை முதன் முதலில் எச்சரிக்கை செய்தகட்சி எது

—இலங்கைத் தமிழரசுக் கட்சி!

பதவி மயக்கத்தில் கிடந்த தமிழ் காங்கிரஸ் தலைவர்கள் சிங்கள ஆட்சிக்கு ஆலவட்டம் வீசியபடி சிங்களக் குடியேற்றத்தை எதிர்க்கத் துணிவற்று கோழைகளாய் கிடந்தபோது—இந்த சதித்திட்டத்துக்கு எதிராக தன்னந்தனியே போராடிய கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக் கட்சி!

தமிழ்ப்பிரதேசம் சிங்களக் குடியேற்றத்தால் பறிபோகாமல் இயன்றவரை தடுத்து நிறுத்திவைத்திருப்பதும் தமிழ் பேசும் மக்கள் தமிழ் பிரதேசங்களில் பரந்து சென்று குடியேற வேண்டும் என்பதை தனது முக்கிய பிரச்சாரமாகக் கொண்டுள்ளதுமான கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக் கட்சி!

கடுகு சிறிதானாலும் காரம் பெரிது என்பதுபோல—போதிய வளர்ச்சிபெறுத நிலையிலும் — முதற் போராட்டமாக—தமிழுணர்ச்சி பொங்கியெழ—தமிழைப் பழித்த அப்போதைய பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவலைக்கு 1953ம் ஆண்டே கறுப்புக் கொடி பிடித்து போலீசாரின் குண்டாந்தடியை ஏற்றுக்கொண்டு தியாகத்தழும்பு ஏறிய கட்சி எந்தக் கட்சி?

—இலங்கைத் தமிழரசுக் கட்சி!

வாய்மை, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு தியாக உள்ளம் படைத்ததலைவர்களையும் தொண்டர்களையும்கொண்ட கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக் கட்சி!

தமிழர்களின் மொழியுரிமையைப் பறிக்கும் தனிச் சிங்களச் சட்டம் 1956ம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் திகதி பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது அதை எதிர்த்து இலங்கையிலேயே முதன் முதலாக காந்தி காட்டிய அறவழியில் காலிமுகக் கடற்கரையில் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தி ஈழத் தமிழினத்திற்கு இழைக்கப்படும் அநீதியை அகில உலகுக்கும் பிரத்தியட்சமாக எடுத்துக் காட்டிய கட்சி எந்தக் கட்சி?

—இலங்கைத் தமிழரசுக் கட்சி!

காடையர்களின் கல்லடிகளாலும் பொல்லடிகளாலும் மண்டை பிளந்து இரத்தம் குபீரெனப் பாய்ந்த போதும் —காலிமுக பசும் புற்றரை இரத்த ஆறாக ஓடியபோதும், அண்ணல் காந்தி காட்டிய அறவழிப்பாதையை மறவாது அமைதி காத்த தலைவர்களையும் தொண்டர்களையும் கொண்ட கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக் கட்சி!

சீருடனும் சிறப்புடனும் செல்வமாக வளர்க்கப்பட்ட தம் அருமைப் பிள்ளைகள் காடையர்களால் கடுமையாகத் தாக்கப்பட்ட நேரத்திலும் எத்தவித உணர்ச்சியையும் காட்டாது—பதட்டப்படாது—ஏற்றுக் கொண்ட போராட்டத்தில் கண்ணும் கருத்துமாக இருந்த செம்மல் செல்வநாயகத்தை வழிகாட்டியாக கொண்ட கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக் கட்சி!

ஈழத் தமிழினம் தன் இழந்த உரிமைகளையும் சுதந்திரத்தையும், தியாகங்களின் மூலமும்—அஹிம்சைப் போராட்டங்களின் மூலமும் பெற முடியும் என்ற நம்பிக்கையை யூட்டியுள்ளது எந்தக் கட்சி!

—இலங்கைத் தமிழரசுக் கட்சி!

ஈழத்தின் சரித்திரமே காணாத அளவில் 1956ம் ஆண்டு ஆகஸ்ட மாதம் மாபெரும் திருமலை பாதயாத்திரையை நடத்தி உள்ளத்தால் ஒன்றுபட்ட இலட்சக்கணக்கான தமிழ் பேசும் மக்களைக் கூட்டி நமது கொள்கை இதுதான்—கோரிக்கை இதுதான் என்பதை சிங்களவர்களுக்கும், உலகுக்கும் பிரகடனப்படுத்திய திருமலைத்தீர்மானத்தை நிறைவேற்றிய கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக கட்சி!

காலக்கெடு கொடுத்து உரிமையைக் கொடு—இன்றேல் உரிமைப் போராட்டம் ஆரம்பமாகும் என்று சிங்கள இன வெறி பிடித்து நின்ற பிரதமர் பண்டாவுக்கு பகிரங்க எச்சரிக்கை விடுத்தது எந்தக் கட்சி?

—இலங்கைத் தமிழரசுக் கட்சி!

தனிச் சிங்களம் என்று வெறி பிடித்து ஆடிய பண்டா ஆட்சியைப் பணியவைத்து—வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஆட்சி மொழி தமிழ் என்பதையும், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சுயாட்சி வழங்கும் பிரதேச சபை உரு வாக்கப்பட வேண்டுமென்... புக் கொள்ளும்படி செய்து... டன் உடன்படிக்கை செய்... கட்சி எந்தக் கட்சி!

—இலங்கைத் த...

தமிழ்ப் பகுதியில் தனி... திணிப்பதற்கு எதிர்ப்புத்... அடையாளப் போராட்ட... 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்... மாதங்களாக வெற்றிகர... அதனால் சிறைக்கொடுமை... கொண்ட தியாகிகள் நிறை... தக்கட்சி?

—இலங்கைத் த...

இன்று கூட மோட்டா... வாகன சட்டத்தைமீறி த... பொறித்த கார் வண்டிகளை... வரும் தலைவர்களைக் கொண்... தக்கட்சி?

—இலங்கைத் தமி...

'அரசபணி' என்று தமி... பது தபால் சட்டத்தை... என்று தெரிந்தும் இன்றும்...

## புரியாத

துச்சமாக மதித்து 'அரசப... கடிதஉறைகளில் தூய தமி... கும் தலைவர்களை கொண்ட...

—இலங்கைத் த...

தமிழ் மக்களின் சாபத்... வரும் சாதி அரக்கனையும்... பேயையும் அழித்தொழிக்... திருத்தப்பணியில் அந்தர... ஆரம்பத்திலிருந்தே உழை... எது?

—இலங்கைத் த...

சமூக ஏற்றத்தாழ்வு... நிறைவேறக் காரணமாக... தீண்டாமையை ஒழிக்கும்... சமபந்தி போசனம் நடத்... யாத்திரைகள் மேற்கொள... வகுதியில் பல சைவ ஆல... தாழ்த்தப்பட்ட மக்களுக்கு... காரணமாக இருந்ததும்... தமிழர் ஒருவரை முதன் மு... டராக்கியதும் எந்தக்கட்சி?

—இலங்கைத் த...

தீண்டாமை ஒழிப்பை... படை இலட்சியங்களில் ஒ... றுக் கொண்டுள்ளகட்சி எந்...

—இலங்கைத் த...

தடுப்புக்காவலில் ம... வாடியும், காராக்கிருகத்... வதைப்பட்டும் மனைவி... தாயை, தந்தையை பிரி...

## நாம் சலுகை...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டால், 1960 ஜூலை முதலாந் திகதியிலிருந்தே பதவியில் உறுதிப்படுத்தப்படுவார். அதே ஊழியர் 1965 ஜூலை முதலாந் திகதியிலிருந்து மூன்றாண்டு காலத்துள் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் அதே பெறுபேறுதான் கிடைக்கமுடியும். ஏனெனில் 2 C (v) விதியின்படி அவர் சேவையில் சேர்ந்த திகதியிலிருந்தே பதவியில் உறுதிப்படுத்தப்படவும், சம்பள உயர்வுகளைப் பெறவும் தகுதி படைத்தவர் ஆகின்றார்.

இப்பொழுது திறைச்சேரி வெளியிட்டுள்ள 769வது சுற்றறிக்கை, நிர்வாக விதிகள் 121ன் மூன்றாவது உப விதியுடன் முழுமுறையையும் தொடர்புபடுத்தி, சிங்களத் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்த திகதியிலிருந்தே முழுமுறை நிர்மாணிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது.

இது, குறிப்பிட்ட காலத்துக்கிடையில் உறுதிப்படுத்துவதற்கு வேண்டிய தராதரத்தையடையத் தவறும் ஓர் ஊழியருக்குரியதான 121வது நிர்வாக விதியின் 2வது உப விதியை தவறாகப் பிரயோகிப்பதாகும்.

2 C (i) விதிப்படி, தேவைப்பட்ட அளவு சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய ஊழியருக்கு 1965 ஜூலை முதலாந் திகதியிலிருந்து உத்தியோகமொழியில் தேர்ச்சிபெற மேலும் மூன்றாண்டு தவணையளிக்கப்பட்டது.

இவர்கள், சரியான நேரத்தில் உறுதிப்படுத்தலுக்கு வேண்டிய தராதரத்தையடையத் தவறிய ஊழியர்களல்லர். இவர்களுக்கு காலம் நீடிக்கப்பட்டு கொடுக்கப்பட்ட காரணத்தினால், 1965 ஜூலை முதலாந் திகதியிலிருந்து மூன்றாண்டு காலத்துள் தராதரத்தைப் பெற்றிருந்தால், இவர்கள் சிங்களத்தில் சரியான நேரத்தில் தேர்ச்சியடைந்ததாகவே கருதப்படவேண்டிய...

2 C (iii) பந்தியில் கூறப்பட்டுள்ளதாவது:-

"நீடிக்கப்பட்ட காலம் முடிவடையும்போது, குறிப்பிட்டளவு சிங்களத் தேர்ச்சித் தராதரத்தை அடையத் தவறும் ஊழியர்கள் விடயத்தில் நிர்வாக பிரமாணங்கள் 120, 121ல் சொல்லப்பட்ட சரத்துக்கள் பயன்படுத்தப்படும்."

இதன்படி, 1.7.1965 லிருந்து நீடிக்கப்பட்ட மூன்றாண்டு காலத்துள் சிங்களத்தில் தேர்ச்சிபெற்ற ஊழியர்களுக்கு நிர்வாகப் பிரமாணங்கள் 120, 121 செல்லுபடியாகக் கூடியன அல்ல.

நிர்வாகப் பிரமாணம் 121ன் 2வது சரத்தை பிரயோகித்து முழுமுறையைத் தீர்மானிக்க 769வது திறைசேரி சுற்றறிக்கை தீர்மானிக்கிறது. இந்த சரத்து குறிப்பிட்ட மூன்றாண்டு காலத்துள் சிங்களத்தில் தேவையான அளவு தேர்ச்சி பெறத் தவறியவர்களுக்கே பிரயோகிக்கப்பட வேண்டியதாகும்.

769வது திறைசேரிச் சுற்றறிக்கை வாபஸ் பெறப்பட வேண்டும். நீடிக்கப்பட்ட கால எல்லைக்குள் சிங்களத் தேர்ச்சியடைந்த ஊழியர்களுக்கு அவர்களது நியமனத் திகதியிருந்தே முழுமுறை கணிக்கப் படவேண்டுமென்பதை வலியுறுத்தும் புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட வேண்டும் ஏராளமானபேர் திறைசேரியின் 769வது சுற்...

## கர்ப்ப...

(2ம் ப... ருக்கு ... றை? 'அக்க... 'இனை... ம்?"

...றறிக்கை ... இன்ன... இப்... வுக்கு... மாநாடு... இரேுப... நிதிய... செயல... யும் அ... கொள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...த்தது என்ன?

...க்கப்பட வேண்டுமென்பதையும் ஒப்... கொள்ளும்படி செய்து தமிழர்களு... உடன்படிக்கை செய்யும்படி வைத்த ...சி எந்தக் கட்சி!

—இலங்கைத் தமிழரசுக் கட்சி

தமிழ்ப் பகுதியில் தனிச் சிங்களத்தை ...ிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ...டையாளப் போராட்டமாக சிங்கள ...ரீ' எதிர்ப்புப் போராட்டத்தை பல ...தங்களாக வெற்றிகரமாக நடத்தி ...களும் சிறைக்கொடுமையையும் ஏற்றுக் ...ண்ட தியாகிகள் நிறைந்த கட்சி எந் ...க்கட்சி?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

இன்று கூட மோட்டார் போக்கு ...த்து சட்டத்தைமீறி தமிழ் எழுத்துப் ...ரித்த கார் வண்டிகளை உபயோகித்து ...ம் தலைவர்களைக் கொண்டகட்சி எந் ...க்கட்சி?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி.

'அரசபணி' என்று தமிழில் பொறிப் ...து தபால் சட்டத்தை மீறுவதாகும் ...ன்று தெரிந்தும் இன்றும் சட்டத்தை

வாடியும், துன்பங்களை இன்முகத்துடன் ஏற்றும், சொத்து சுகங்களை —சொந்த இளைபங்களை இழந்தும் இனத்தின் சுதந் திரத்திற்காக போராடிய இயக்கம்— போராடிவரும் இயக்கம் எது?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கம், வீ. ஏ. கந்தையா, இராசவரோதயம், ஏகாம்பரம் போன்ற தியாகிகளை—வீரர்களை இனவிடுதலைப் போரில் பலி கொடுத்த கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

கொடியைக் காப்பதற்காக குண்டடிபட்டவீரன் திருமலைத்தியாகி நடராசன், மட்டுநகர் இராசேந்திரன், கண்ணைப்பறி கொடுத்த எருவில் மூர்த்தி, காதைப்பறி கொடுத்த தாமரைக்குளம் செல்லையா, இராணுவத்தின் துப்பாக்கிக்கு தன் மார்பைக் கொடுத்த தொழிலாளத் தோழர்கள் ஐயாவு, பிரான்சிஸ் போன்ற எண்ணற்ற தியாகிகளை உருவாக்கியகட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

தமிழினத்தின் குறைந்த பட்சக் கோரிக்கைகளைக் கூட அலட்சியப்படுத்திய யூ.

நின்ற சிங்கள ஆட்சியை ஓட ஓடவிரட்டியடித்த கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

1964ம் ஆண்டு கூட்டரசாங்கம் பத்திரிகைச் சுதந்திரத்தை பறித்தெடுத்து இந்நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைக்கு வேட்டு வைக்கும் தவறான பாதையிற் சென்றபோது, அந்த அரசாங்கத்தை வீழ்த்தி இந்நாட்டில் ஜனநாயக மரபைக் கட்டிக் காத்தது எந்தக் கட்சி?

—இலங்கைத் தமிழரசுக் கட்சி!

தமிழினத்தின் எந்தக் கோரிக்கைகளை யூ. என். பி. ஆட்சி 1960ம் ஆண்டு திமிருடன் ஏற்க மறுத்ததோ அதே கோரிக்கைகளை வழங்குவதாக 1965ம் ஆண்டு ஒப்புக்கொள்ள வைத்த கட்சி எந்தக் கட்சி?

—இலங்கைத் தமிழரசுக் கட்சி!

சிறிமா, சாத்திரி உடன்படிக்கை சட்டத்திலும் அடையாள அட்டை சட்டத்திலும் தமிழ் பேசும் மக்களுக்கு பாதகமாக இருந்த அம்சங்களை நீக்குவதற்கு போராடி வெற்றிகண்டது எந்தக் கட்சி?

—இலங்கை தமிழரசுக் கட்சி!

புறக்கணித்து அநீதி இழைக்கின்ற போதிலும்— அச்சலுகைகளை உள்ளடக்கிய 701வது நிறைசேரி சுற்று நிருபத்தை அன்று அரசாங்கம் வெளியிடுவதற்கு காரணமாக இருந்தகட்சி எந்தக்கட்சி?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

இலங்கையின் அரசியல் வரலாற்றிலேயே முதல் தடவையாக மந்திரிப்பதவியைத்தாமே முன் வந்து உதறி எறிந்த அரசியல் கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

பதவியைக்காட்டி பட்டத்தை நீட்டி தமிழ் அரசியல் தலைவர்களை விலைக்கு வாங்கி அடிமைகளாக வைத்துக் கொள்ளலாம் என்ற சிங்களப் பெரும்பான்மையினரின் எண்ணத்தில் மண்ணைப் போட்ட கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

தமிழ் மக்கள் எந்த நெருக்கடி ஏற்பட்டாலும் எத்தகைய இன்னல்கள் நேர்ந்தாலும் சமஷ்டி அரசியலின் கீழ் சுயாட்சி பெறுவது என்ற தமது இலட்சியத்தினி

# ...புரியாத மரமண்டைகளே! இதோ சாதனைப் பட்டியல்!

...சமாக மதித்து 'அரசபணி' என்று ...த்தடைறைகளில் தூயதமிழில பொறிக் ...ம் தலைவர்களை கொண்டகட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

தமிழ் மக்களின் சாபத்தீடாக இருந்து ...ரும் சாதி அரக்கனையும் தீண்டாமைப் ...யையும் அழித்தொழிக்கும் சமூகசீர் ...திருத்தப்பணியில் அந்தரங்க சுத்தியுடன் ...ம்பத்திலிருந்தே உழைத்துவரும்கட்சி ...து?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி?

சமூக ஏற்றத்தாழ்வு தடைச்சட்டம் ...றவேறக் காரணமாக இருந்ததும், ...டாமையை ஒழிக்கும் நோக்குடன் ...பந்தி போசனம் நடத்தியதும் பாத ...த்திரைகள் மேற்கொண்டதும், வட ...குதியில் பல சைவ ஆலயக் கதவுகள் ...ஒடுக்கப்பட்ட மக்களுக்கு திறக்கப்பட ...ரணமாக இருந்ததும் சிறுபான்மைத் ...மிழர் ஒருவரை முதன் முதலாக செனட் ...ராக்கியதும் எந்தக்கட்சி?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

தீண்டாமை ஒழிப்பை தனது அடிப்... இலட்சியங்களில் ஒன்றாகவே ஏற் ...கொண்டுள்ளகட்சி எந்தக்கட்சி?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

தடுப்புக்காவலில் மாதக்கணக்காக ...டியும், காராக்கிருகத்தில் சித்திர ...தைப்பட்டும் மனைவியை, மக்களை, ...யை, தந்தையை பிரிந்து சிறையில்

என்: பி. ஆட்சியை 1960ம் ஆண்டு மண் கவ்வச் செய்த கட்சிஎது?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

உலகம் பிரமிக்கத்தக்க முறையில்— அண்ணல் காந்தியே உயிருடன் இருந்திருந்தால் ஆசிவழங்கக்கூடிய முறையில்—மக்கள் சக்தியைத் திரட்டி கடமை கண்ணியம் கட்டுப்பாடு தவறாது 1961ம் ஆண்டு இரு மாதங்களாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தினை நடத்தி சமுத்தின் ஆட்சி சக்கரத்தையே ஸ்தம்பிக்கவைத்த கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

வட, கிழக்கு மாகாணங்களில் இரு மாதங்களாக ஆட்சியே நடைபெறவில்லையென்று இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயகாவே ஒப்புக் கொள்ளும்படி வைத்த சக்திவாய்ந்த கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

தமிழ்கூறும் நல்லுலகிலேயே முதன் முதலாக தனித்தமிழ் முத்திரை வெளியிட்டு அஞ்சலகம் நடத்தி—இலங்கை அரசாங்கத்தின் சட்டத்தையே மீறிய கட்சி எந்தக்கட்சி?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

இப்போராட்டத்தின் மூலம், தனிச் சிங்களத்தை தமிழ்ப்பகுதியில திணித்தே தீருவோம் என்று ஆங்காரவெறி பிடித்து

கட்டாய நாடு கடத்தலையும், தனி வாக்காளர் பட்டியலையும் நீக்குவதற்கு மலைநாட்டுத் தமிழ்த் தலைவர்களுடன் சேர்ந்து கூட்டாக நடவடிக்கை எடுத்த கட்சி எந்தக் கட்சி?

—இலங்கைத் தமிழரசுக் கட்சி!

பௌத்த பிக்கு ஒருவர் சுட்டுக்கொல்லப்பட நேரிட்டபோதிலும், தமிழ் மொழிப் பிரமாணங்களை அரசாங்கம் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு மூல காரணமாக இருந்த கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

இன்று ஆட்சியாளர் குத்துக்கரணமடிக்க முயன்றாலும்— அரசாங்கத்திலிருக்கும் போது தமிழ்ப் பிள்ளைகளின் போதனாமொழி தமிழே என்பதை அரசாங்கத்தை ஏற்கும் படி வைத்த கட்சி எந்தக்கட்சி

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

பழைய அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களத் தேர்ச்சி தேவையில்லையென்பதை அரசாங்கத்தைக் கொண்டு ஒப்புக் கொள்ளும் படி செய்து, அவர்களுக்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த சம்பள உயர்வு போன்றவற்றை பெற்றுக் கொடுத்து அவர்களுக்கு வழங்கப்படவிருந்த கட்டாய ஓய்வுக்கடிதங்களை யெல்லாம் வாபஸ் பெறச் செய்த கட்சி எந்தக்கட்சி?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

புதிய ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் பலவற்றை அரசாங்கம்இன்று

ருந்து இம்மியளவும் விலக மாட்டார்கள் என்பதை நிரூபித்துவரும் கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக்கட்சி!

இலங்கையில் உண்மையான ஜனநாயகம் மலர வேண்டுமானால் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும்— அந்தந்தப் பிரதேச மக்களிடம் அந்தந்தப் பிரதேசத்து நிர்வாகம் ஒப்படைக்கப்பட வேண்டும் காலனி ஆட்சி முறையான கச்சேரி முறை மாற்றப்படவேண்டும் — என்னும் கொள்கையை இந்நாட்டிலுள்ள சகல அரசியற் கட்சிகளையும் ஒவ்வோர் கட்டத்தில் ஏற்றுக் கொள்ளும்படி வைத்த கட்சி எது?

—இலங்கைத் தமிழரசுக் கட்சி!

பிரதேச, மத, வேறுபாடுகளின்றி தமிழ் பேசும் மக்களுக்கு பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக் கழகம் நிறுவப்படவேண்டுமென்ற கோரிக்கையை 1956ம் ஆண்டிலிருந்தே எழுப்பி வருவது எந்தக் கட்சி?

—இலங்கைத் தமிழரசுக் கட்சி!

இப்படி தமிழரசுக்கட்சியின் சாதனைகளையும் ஆற்றிவரும் பணிகளையும் கூறிக் கொண்டே போகமுடியும். தமிழரசுக் கட்சி கடந்த 13 ஆண்டுகளில் எதைச் சாதித்து விட்டது என்று கேட்கும் தமிழ் காங்கிரஸ் தலைவரே! இவை போதுமா? இன்னும் வேண்டுமா?

—"கோவை"

...கை தீர்மா ...சரத்து ...றான்று ...ங்களத்தில் ...வு தேர்ச்சி ...ர்களுக்கே ...வேண்டிய ...2ளச் சுற் ...பெறப்பட ...க்கப்பட்ட ...சிங்களத் ...ழியர் ...துறியமனத் ...முதுறை ...ண்டுமென் ...தும் புதிய ...ளியிடப்பட ...மானபேர் ...69வது சுற்

## கர்ப்பக் கிரு...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு ஏன் இவ்வளவு அக்கறை?'

'அக்கா'

'இடையில் உள்ள ஒருத்தி ...இப்படி அவசரப்பட ...ம்?' என்றாள் மீண்டும்.

'அக்கா மிஸ்டர் பிரகாஷிடம் புனிதம் ரீச்சர் பெரும் மதிப்பு வைத்திருக்கிறார்கள். அவருடைய வாழ்க்கையில் நிறைந்த அக்கறையுடையவர்கள்.'

'சரி சரி எனக்கும் சந்தோஷம் தான் 'ஆனால் அவர் என்ன சொல்கின்றாரோ?'

'யார்? அத்தானா?'

'ஆமாம்'

'அக்கா அவரை நான் சமாளித்து விடுகின்றேன். நானே பிரகாஷிடம் பலதடவை கேட்க நினைத்துப்பயந்திருந்தேன். ஏதோ நல்ல காலம் புனிதம் உருவில் கடவுள் ஆணை புரிகின்றார்... சந்தர்ப்பத்தில் ... சொன்னாலும் நான் கேட்கப் போவதில்லை'

'இதோ. உன் திருமணத்தில் எங்களுக்கு அக்கறையில்லையாடி. நான் சும்மாதான் கூறினேன். ஆனால் நீ...

'அக்கா நான் முக்கியமாகத் திருமணம் செய்து கொள்வதே உங்களுக்காகத்தான்'

'தெரியுமடி இதோ எனக்கு'

'அக்கா, நீங்கள்...

'நானே உன்னிடம் கேட்கலாம் என நினைத்தேன்... ஆனால்...'

சுவர்ணா இப்படிக் கூறி விட்டு நிறுத்தியதும் இதா பயந்து போய் என்னவோ ஏதோ என்று ... தாளா.

—(வளரும்)—

...றறிக்கையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பிரச்சினையில் ஓர் முடிவுக்குவர—உங்களுடன் ஓர் மாநாடு கூடிப்பேச விரும்புகிறோம். அம்மாநாட்டுக்கு நிதியமைச்சர், நிறைசேரி செயலாளர், ஆகியோரையும் அழைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

## புதிய இலக்கிய ஏடு

ஈழத்து இலக்கிய முயற்சிகளுக்கு விரிவான களம் அமைத்துக்கொடுக்கும் எண்ணத்துடன் ''மலர்'' என்ற பெயரில் ஒரு இலக்கிய மாத சஞ்சிகையை வெளியிட ஏற்பாடுகள் செய்துவருகின்றனர் மட்டுநகர் எழுத்தாளர்கள் சிலர். இது ஒரு அரசியல் கலப்பற்ற இலக்கிய ஏடு என்று சொல்லப்படுகின்றது. இதற்கான ஏற்பாடுகளை 'மலர்' வெளியீட்டுக் குழுவினர் சுறுசுறுப்பாகக் கவனித்துவருகின்றனர்.

ஈழத்தில் ஏற்கனவே தோன்றி மறைந்துபோன எண்ணற்ற சஞ்சிகைகளை மனதில் கொண்டு எழில் பூத்த இனிய மலராக இம் 'மலர்' வெளியீட்டுக் குழுவில் ஒருவரான திரு. அன்புமணி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கண்ணன் என் காதலன்" படத்தில் கவிஞர் காசி ஆனந்தன் பாடல்!

## ஆலங்குடி சோமுவின் துணிச்சலான திருட்டு!

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் கவிதைகள் நாளுக்கு நாள் உலகப் பிரசித்தி பெற்று வருகின்றன. இந்த ஆண்டின் தொடக்கத்தில் மலேசியாவில் காசி ஆனந்தனின் கவிதையை ஒருவர் திருடியதும், கையும் மெய்யுமாக அவர் பிடிபட்ட செய்தியை 'சுதந்திரன்' கடச்சட வெளியிட்டதும், இந்த செய்தியை மலேசியப் பத்திரிகைகள் மறுபிரசுரம் செய்ததும் தமிழ் பேசும் மக்கள் அறிந்ததே! இப்பொழுது காசி ஆனந்தனின் கவிதையைத் திருடிய இன்னொரு கவிஞர் பிடிபட்டு இருக்கிறார். சினிமாக் கவிஞர் ஆலங்குடி சோமு இவ்வளவு சின்னத்தனமான செயலில் ஈடுபடுவார் என்று யாருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

ஈழத்தில் இன்னும் திரையிடப்படாத 'கண்ணன் என் காதலன்' படத்தில் சௌந்தரராஜன், சுசீலா பாடுகிறார்களே 'சிரித்தாள் தங்கப் பதுமை...' என்ற பாடலில் இடையே வரும் நான்கு வரிகள் கவிஞர் காசி ஆனந்தன் தமிழகத்தில் தங்கியிருந்த காலத்தில் எழுதிய ஒரு கவிதையின் சிறு பகுதியே!

'.....................................

அழகென்னும் வடிவில்
நிலையிழந்தேன்
ஆண் மகன் பிடியில் ஏனோ
மறந்தேன்
பழகியும் ஏனோ
தலைகுனிந்தேன்
பருவத்தினாலே முகம்
சிவந்தேன்

.....................................'

இவைதான் அந்த நான்கு வரிகள்.

கவிஞர் காசி ஆனந்தன் தமிழக அரசியலில் தீவிர பங்கு கொண்டு இருந்த காலம் — தமிழகத்து ஏடுகளிலே அவருடைய கவிதைகள் மணந்த காலம்—தமிழகத்து மேடைகளிலே அவருடைய முழக்கம் ஓங்கி ஒலித்த காலம் — அக்காலத்தில் ஓர் நாள்...... கலைஞர் கருணாநிதி அவர்களிடமிருந்து கவிஞருக்கு அழைப்பு வந்தது. அப்பொழுது 'பூம்புகார்' படப்பிடிப்பில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார் இன்றைய தமிழக முதல்வர் — அன்றும் — இன்றும்—என்றும் மக்கள் தலைவர் கருணாநிதி அவர்கள். கலைஞரின் அழைப்பை ஏற்றுச் சென்ற கவிஞரை கலைஞர் சந்தித்தார்.

'பூம் புகார்' படத்துக்கு கவிஞர் காசி ஆனந்தனும் பாடல் எழுத வேண்டும் எனக் கலைஞர் கேட்டுக் கொண்டார். 'மாசறு பொன்னே, வலம்புரி முத்தே...' என ஆரம்பித்து கவிதையை எழுதுங்கள்...... என்ற கலைஞரின் அன்புக் கட்டளையை கவிஞர் ஏற்றுக் கொண்டார்.

கோவலனும் கண்ணகியும் சேர்ந்து பாடுவது போல் அமைய வேண்டும் இப்பாடல் என்றும் கலைஞர் கேட்டுக் கொண்டார். கவிஞர் எழுதிய பாடல் இதோ......

கோவலன்

மாசறு பொன்னே வலம்
புரிமுத்தே
மாமன் மகளே திரு மகளே

கண்ணகி

ஆசையின் வடிவே ஆயிரம்
நிலவே
அம்மான் மகனே தமிழ்
மகனே

கோவலன்

காவிரி நதிபோல் இடை
யாடும்
கால்விரல் நிலத்தில்
படம்போடும்

கண்ணகி

அழகெனும் வடிவில் நிலை
யிழந்தேன்
ஆண்மகன் பிடியில ஏனோ
மறந்தேன்
பழகியும் ஏனோ
தலை குனிந்தேன்
பருவத்தினாலே முகம்
சிவந்தேன்

'பூம்புகார்' படத்தில் உடுமலை நாராயணகவி அவர்களுக்கு ஓர் இடம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதனால் தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் உணர்ச்சிக் கவிஞரின் இந்தப்பாடல் இடம் பெறாமல் போயிற்று.

'பூம்புகார்' படத்திற்கு ஆலங்குடி சோமுவும் பாடல்கள் எழுதினார். அந்த நேரத்தில் கவிஞரின் பாடல் அவரிடம் சிக்கியிருக்க வேண்டும். சந்தர்ப்பம் இடைத்தபோது கலையாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்—வகையாக மாட்டிக் கொள்ளப் போகிறோம் என்பதை உணராததால்! பாவம் ஆலங்குடி சோமு! தமிழகமும் ஈழமும் ஒருங்கே போற்றும் உணர்ச்சிக் கவிஞரின் பாடலிலா இவர் கைவைக்க வேண்டுப?

கவிஞர் காசிஆனந்தன் இதுபற்றி என்னிடம் கூறியதாவது: தற்போது சினிமாக்களில் வரும் பாடல்களை நான் வானொலியில் கேட்பதில்லை. நாய் குரைப்பது போலவும், பூனை அழுவது போலவும், நரி ஊளையிடுவது போலவும் அமைந்து பற்றுக் குறைக்கு பாலுணர்ச்சியையும் தூண்டும் தற்காலச் சினிமாப் பாடல்களை முற்றாக வெறுக்கின்றவன் நான்.

இரண்டொரு நாட்களுக்கு முன்பு வானொலியில் தற்செயலாக நான் ஒரு பாடலைக் கேட்க நேர்ந்தது. அந்தப் பாடலை எங்கேயோ நான் எழுதியது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. என்னுடைய பாடல் ..... 'பெரிய மனிதன்' படத்தில் ..... கணம் நினைத்தேன் பின்பு இந்தப் பாடல்களில் இந்த வரிகள் இல்லையே என்று முணுமுணுத்துக் கொண்டேன். பக்கத்திலிருந்த நண்பரைப் பார்த்து இந்தப் பாடல் எந்தப் படத்தில் வருகிறது எனக் கேட்டேன். 'கண்ணன் என் காதலன்' படத்தில் என்று நண்பர் சொன்னார். இந்தப் பாடடுப் புத்தகம் ஒன்றை வாங்கி வருமாறு நண்பரைக் கேட்டுக் கொண்டேன்.

நண்பர் வருவதற்கிடையில் என் எண்ண அலைகள் அங்கு மிங்கும் பாய்ந்தன. அந்தப் பாடலை எங்கு எதற்காக எழுதினேன் என்பதைத் தேடிக் கண்டு பிடித்து விட்டேன். நீண்ட காலத்திற்கு முன்பு 'பூம்புகார்' படத்திற்கு அவசரத்தில் நான் இயற்றிய பாடலின் ஒரு பகுதிதான் அது. நண்பர் பாடடுப் புத்தகத்தைக் கொண்டு வந்து தந்தார். என்னுடைய பாடலை எடுத்து தன்னுடைய பாடலோடு ஒட்டிய கவிதைத் திருடர் ஆலங்குடி சோமு எனபவர் என்று அறிந்தேன். என்னைப் பொறுத்தவரை சினிமாவுக்காக நான் இறுக்கிய இந்த வரிகள் பெரிய கவிதையே அல்ல. இது திருடப்பட்டதால் எனக்கு எந்தப் பெரிய நட்டமுமில்லை. ஆனால் தமிழ் நாட்டுக் கவிஞர்களின் குலத்தை ஆலங்குடி சோமு களங்கப்படுத்தி விட்டாரே என்பதற்கு வருந்தும் அதே வேளையில், கண்ணியமற்ற இலக்கியத் திருடர்களை மக்களும் அறிந்திருக்க வேண்டும என்பதற்காக இத்தகவலை வெளியிடுகிறேன்!

கவிஞர் இந்தத் திருட்டுக்கு மூன்று சாட்சிகள் உண்டு என்று கூறுகிறார்; 'முதல் சாட்சி—என்னுடைய கைப்பட நான் பூம்புகாருக்கு எழுதிய கவிதைப் பிரதி அப்போது 'பூம்புகார்' படத்திற்குப் பொறுப்பாக இருந்த உயர் திரு. முரசொலி மாறன் அவர்களிடமுள்ள பைலில் இப்போதும் இருக்கும், இரண்டாவது சாட்சி, இக்கவிதையைப் பல முறை படித்து, நான் பாட ரசித்த என் அண்ணனும், பிரபல திரைக்கதை வசனகர்த்தாவுமான திரு. ஏ. எல். நாராயணன் அவர்கள். மூன்றாவது சாட்சி, ஆலங்குடி சோமுவின் மனச்சாட்சி!'

—செங்குட்டுவன்

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியைச் சேமிக்கவும் பாடுபடுங்கள்.

Dial 2739




ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.

திரைவிமரிசனம்:



# பாலாடை

மனிதர்கள் ஒன்று நினைக்கத் தெய்வம் வேறொன்று நினைத்து விடுகிறது. இதன் பயனாக ஒரு நல்ல குடும்பத்தில் ஏற்படும் வேதனைகளை உணர்ச்சி பூர்வமாக சித்தரிக்கும் ஓர் அருமையான 'ஹைகிளாஸ்' படம் பாலாடை.

தனக்கு குழந்தையே பிறக்கமாட்டாது என்ற வைத்தியர்களின் கூற்றை நம்பிய ஜானகி என்ற இலட்சிய பெண் கணவனை வற்புறுத்தி தன் உடன் பிறந்தவளான சாந்தாவுக்கு திருமணம் செய்து வைக்கிறாள்—குடும்பம் விளங்க குழந்தை கிடைக்கும் என்ற ஆவலுடன். ஆனால் திருமணம் முடிந்த அன்றே ஜானகி தான் கருத்தரித்திருப்பதாக உணர்கிறாள். கணவனோ ஜானகியைத் தவிர மற்றொருத்திக்கு தனது உள்ளத்தில் இடம் கொடுக்க முடியாமல் தவிக்கிறான். சாந்தாவும் தனது கணவரும் மகிழ்வுடன் வாழ பல முயற்சிகள் எடுக்கும ஜானகி இறுதியில் மழலைச் செல்வம் ஒன்றையும் பெற்றுக் கொடுத்துவிட்டு தன்னையே தியாகம் செய்கிறாள். இப்படியொரு முக்கோணக்கதை தான் பாலாடை.

ஜானகியாக பத்மினியும், சாந்தாவாக விஜயாவும் இவர்களது கணவனாக (சேகர்) நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் நடித்திருக்கிறார்கள்.

மூவரும் தங்கள் உணர்ச்சிபூர்வமான நடிப்பால் நமது இதயத்தை நெகிழவைத்துக் கண்ணீரை வரவழைத்து விடுகிறார்கள். மழலைச் செல்வம் தனக்கு இல்லையே என்ற வேதனையை சிவாஜி வெளிப்படுத்தும கட்டங்கள் அபாரம்! பதமினியின் தியாகம் உள்ளத்தை உருக்குகிறது

பீம்சிங்கின் படம் என்றால் அது சிறந்ததோர் குடும்பச் சித்திரமாகவேயிருக்கும் எனபதை பாலாடையும் நிரூபிக்கிறது.

தீபாவளிக்கு சினிமாஸ் ஸ்தாபனத்தார் படைத்துள்ள இனிப்பான படம் — பாலாடை.

—மகேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் உரிமை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படாவிடினும், இலங்கையில் தமிழர்கள நசுக்கப்பட்டால் தமிழ் நாட்டில் நாம் வெறுமனே கைகட்டி பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். உங்களுக்காக உங்கள் உரிமைக்காக—தமிழ் நாட்டிலிருந்தபடியே குரல் கொடுப்போம்.

'1958ம் ஆண்டில் இலங்கையில் தமிழர்கள் சிங்கள இனவெறியரால் கொடூரமாகத் தாக்கப் பட்டபோதும் அங்கிருந்து குரல் கொடுத்தோம். 1961ம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையில் இலங்கைத் தமிழர்கள் ஒன்றுபட்டு மொழிப் போரில் ஈடுபட்ட போதும் அப்போராட்டத்துக்கு ஆதரவாக தமிழ் நாட்டில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் கூட்டங்களும் நடத்தினோம். உலகின் கண்களை உங்கள் பக்கம் திருப்பினோம்.

'எதிர்காலத்திலும், இலங்கைத் தமிழர்கள் உரிமைக்காக அறவழியில் போராடும் கட்டம் வருமானால் எமது நாட்டின் எல்லைக் கோட்டுக்குள் நின்று கொண்டே உங்கள் கிளர்ச்சிக்கு ஆதரவு தரத் தயங்கமாட்டோம்.'

—இவ்வாறு கடந்தவாரம் இலங்கை வந்திருந்த தி. மு. க. பிரமுகரும், முன்னாள் டில்லி எம். பியுமான திரு. இரா. தர்மலிங்கம் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார். இப்பேட்டியின்போது முரசொலி மாறனும் உடனிருந்தார். இ. தி. மு. க. (கலாசார இயக்கத்தின்) பொதுச் செயலாளர் திரு. ஏ. எஸ். மணவைத்தம்பியும் இப்பேட்டியில் கலந்துகொண்டார்.

## தமிழரசிலிருந்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

செய்து கொள்கிறார்கள். அப்படி அவர்கள் இந்தியப் பிரஜாவுரிமையை ஏற்பதால், இலங்கையிலே வழ விரும்பும் மலையக மக்களில் சில இலட்சம் பேருக்கு இலங்கைக் குடியுரிமை கிடைக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது!

இந்த உண்மைகளை மறைத்துவிட்டு, திரு. நவரத்தினம் எழுப்பும் விதண்டாவாதங்களில் தமிழினம் ஏமாந்து விடமாட்டாது!

திராவிடக் கழகத்தில் இருந்து வெளியேறி அறிஞர் அண்ணா தி. மு. க. வைத் தொடங்கியது போன்ற சம்பவமே 1949ல் திரு செல்வநாயகம் தமிழ் காங்கிரசிலிருந்து வெளியேறி தமிழரசுக் கட்சியை தொடங்கிய அரசியல் சம்பவமாகும்!

அண்ணாவிடமும், செல்வாவிடமும் உண்மை நேர்மை நிலையான கொள்கை இருந்ததால், தமிழகத்திலும் ஈழத்திலும் இரு கட்சிகளுமே ஆலபோல் வளர்ந்து இன்று தமிழினத்துக்கு நிழல் தருகின்றன.

தி. மு. க. வை விட்டு ஈ. வி. கே. சம்பத் வெளியேறியது போன்ற நிகழ்ச்சியே தமிழரசுக் கட்சியை விட்டு நவரத்தினம் வெளியேறிய நிகழ்ச்சியாகும்.

கழகத்தை விட்டு வெளியேறிய சுயநலம் பிடித்த சம்பத்தை 1962 பொதுத் தேர்தலில் படு தோல்வியடையச் செய்தனர் அண்ணாவின் ஆணைக்குக்கட்டுப்பட்ட சென்னை வாக்காளப் பெருமக்கள்!

இதே போல சுயநல நோக்குடன் தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறிய நவரத்தினத்தையும் அரசியல் பாலைவனத்துக்கு அடுத்த தேர்தலுடன் அனுப்பிவைக்கப் போகிறார்கள் செல்வாவின் ஆணைக்கு கட்டுப்பட்ட காவலூர் மக்கள்!

## சுவீப் முடிவுகள்

30-10-69ல் நாவின்னையில் இழுக்கப்பட்ட 270 வது தேசிய லொத்தர் சபை சுவீப் முடிவுகள் வருமாறு:—

முதல்பரிசு ரூபா 100,000
34 C 0105

2வதுபரிசு ரூபா 40,000
10 L 0811

3வதுபரிசு ரூபா 10,000
26 U 0419

தனித்தனி ரூபா 699/90 கொண்ட 100 ஆறுதல் பரிசுகளும் வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| | | 13 A 0439 | 02 E 0597 |
| | | 31 A 0376 | 13 E 0854 |
| | | 31 A 0324 | 25 E 0714 |
| | | 28 B 0676 | 07 F 0603 |
| | | 28 B 0040 | 13 F 0669 |
| | | 32 B 0048 | 17 F 0495 |
| | | 38 B 0275 | 40 F 0170 |
| | | 43 B 0778 | 16 G 0040 |
| | | 16 C 0565 | 34 G 0809 |
| | | 44 C 0596 | 17 H 0574 |
| | | 08 D 0268 | 28 H 0622 |
| | | 09 D 0011 | 13 J 0020 |
| | | 09 D 0003 | 15 J 0902 |
| 11 D 0282 | 23 J 0871 | 15 D 0173 | 33 J 0188 |
| 34 J 0872 | 11 N 0760 | 01 K 0481 | 13 N 0710 |
| 02 K 0086 | 21 N 0521 | 29 K 0685 | 25 N 0205 |
| 35 K 0737 | 34 N 0215 | 41 K 0692 | |
| 41 K 0647 | 36 N 0017 | 05 L 0685 | 05 O 0801 |
| 31 L 0190 | 06 O 0058 | 39 L 0661 | 08 O 0333 |
| 40 L 0395 | 08 O 0111 | 10 M 0760 | 13 O 0503 |
| 09 N 0870 | 20 O 0593 | 25 O 0776 | 27 O 0176 |
| 28 O 0137 | 32 O 0563 | 41 O 0027 | 13 P 0091 |
| 24 P 0544 | 32 P 0267 | 35 P 0339 | 06 Q 0322 |
| 12 Q 0210 | 32 Q 0671 | 13 R 0532 | 22 R 0997 |
| 28 R 0491 | 35 R 0673 | 10 S 0451 | 29 S 0335 |
| 34 S 0115 | 34 S 0925 | 36 S 0188 | 39 S 0229 |
| 06 T 0210 | 28 T 0335 | 42 U 0604 | 10 V 0446 |
| 19 V 0007 | 31 W 0578 | 32 W 0032 | 33 W 0873 |
| 35 W 0213 | 02 X 0565 | 07 X 0258 | 10 X 0331 |
| 17 X 0963 | 24 X 0761 | 37 X 0669 | 22 Y 0362 |
| 04 Z 0138 | 10 Z 0364 | 13 Z 0206 | 13 Z 0953 |


## தீபாவளி வாழ்த்துக்கள்

அன்பர்கள் ஆதரவாளர்கள், அனைவருக்கும் எமது உளம்கனிந்த, தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகுக.

* * *

மில்க் வைற் நீல சோப்
மில்க் வைற் பார் சோப்
மில்க் வைற் சலவை பவுடர்

வாங்கிப் பாவித்து நம்மினம் நாட்டு கைத்தொழிலுக்கு ஆதரவு தாருங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**
யாழ்ப்பாணம்.



# மேலும் ஸ்னோவைட் பரிசுகள் பெறுங்கள்

1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 6-ம் சித்திரக் குள்ளர்வரை, ஸ்னோ-வைட் சோப் மேலுறைகளில் அச்சிடப்பட்டிருப்போர், ஸ்னோ-வைட் விடுகதை போட்டியில், பின்வரும் மாபெரும் பரிசுகளைப் பெற்றுத் தருவார்கள்.
1-ம் பரிசு 1500 ரூபாவும், கிளேசியோ குளிரூட்டி ஒன்றும்.
2-ம் பரிசு 1000 ரூபாவும், சிங்கர் தையற்பொறி ஒன்றும்.
3-ம் பரிசு 500 ரூபாவும், தங்கப் பவுன் காப்பு இரண்டும்.
12 தேற்றப் பரிசுகள்: ஒவ்வொன்றும் 50 ரூபா பெறுமதி உள்ளவை:
1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 7-ம் சித்திரக் குள்ளர்வரை, உள்ள சித்திரக் குள்ளர் படங்களைக் கொண்ட தொகுதி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு டபா ஷேட் அல்லது ஒரு சாரிப் புடவை உங்களுக்குப் பரிசாகக் கிடைக்கும். விரும்பியதை (நீங்கள் தெரிந்தெடுக்கலாம்), ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு பரிசு கிடைக்கும்.
1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 7-ம் சித்திரக் குள்ளர்வரை, உள்ள சித்திரக் குள்ளர் படங்களுடன் ஸ்னோ-வைட் இளவரசியின் படத்தையும் கொண்ட ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு சிங்கர் தையற் பொறி உங்களுக்குக் கிடைக்கும். ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு பரிசு கிடைக்கும்.




[illegible]
1-ம் பரிசு: 250 ரூபா. 2-ம் பரிசு: 100 ரூபா.
5 தேற்றப் பரிசுகள்: ஒவ்வொன்றும், பி.சி.சி. [illegible]
[illegible]
(ஒரே கடித உறையினுள் வைத்து அனுப்பப்பட வேண்டும்).
1-ம் பரிசு: 750 ரூபா. 3 தேற்றப் பரிசுகள்: ஒவ்வொன்றும் 50 ரூபா பெறுமதியுள்ளவை.

விதிகள்

1. [illegible]
2. [illegible]
3. [illegible]
4. [illegible]

[illegible] 1969-ம் ஆண்டு [illegible] மாதம் 31-ம் தேதியாகும்.
5. [illegible]
ஸ்னோ-வைட் பரிசில்கள்,
ஏ. ஜே. என். செனிவிரத்ன அன்ட் சன்ஸ்,
60, ஆனந்த குமாரசுவாமி வீதி,
கொழும்பு-3.
6. [illegible]
7. நடுவர்களின் தீர்ப்பே முடிவானது. [illegible]
இதோ, ஸ்னோ-வைட் விடுகதைப் போட்டிக்கான பிரவேசப் பத்திரம்:-

—வெட்டுக அல்லது படி செய்க—
1. பி.சி.சி. ஸ்னோ-வைட் சோப் [illegible] (ஆம் அல்லது இல்லை) ________
2. பி.சி.சி. ஸ்னோ-வைட் மேலுறையில் [illegible] ________
பெயர் ________
முகவரி ________
________
தபால் அலுவலகம் ________

இப் பிரவேசப் பத்திரத்துடன், (1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 6-ம் சித்திரக் குள்ளர் வரை [illegible]) [illegible] 3 ஸ்னோ-வைட் சோப் மேலுறைகளை வைத்தனுப்புதல் வேண்டும்.



**வெண்மைக்கும் பிரகாசத்துக்கும் பி.சி.சி. ஸ்னோவைட் பல காரியார்த்த சோப்பினை உபயோகியுங்கள்.**

AJNS BCC 244/69


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பி ஏமாந்த பின்னும் அரசாங்கத்துடன்
# இ. தொ. காங்கிரஸ் ஒட்டி உறவாடுவதேன்?




## பதவிக்காக தொழிலாளர்களைக் காட்டிக் கொடுப்பதா?

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 23-வது மகாநாடு நான்கு நாட்களாக அட்டனில் அதிவிமரிசையாக நடைபெற்றது. மகாநாட்டின் கடைசி நாளான 25-10-69 பகல் 11 மணிக்குப் பொதுக் கூட்டம் தலைவர் திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் நடைபெற்றபோது இன்றைய தேசிய அரசாங்கத்தை அனைவரும் ஏகோபித்துக் கண்டித்தனர்.

கூட்டத்திற்குத் தேசிய அரசாங்கத்தின் பிரதிநிதியாகத் தொழில் மந்திரி ஜனாப் முகமது வருகை தந்து பொதுவாகத் தொழிலாளர் முதலாளிகள் நல்லுறவு பற்றிப் பேசிவிட்டுச் சென்றார். மற்றும் நுவரெலியா எம்.பி. டொனல்ட் ரனவீர, மஸ்கெலியா எம். பி. எட்மன்ட் விஜயசூரியா என்போர் தேசிய அரசாங்கம் தமிழ்மக்களுக்கும் தோட்டத் தொழிலாளருக்கும் எவ்வளவோ உதவிகளைச் சலுகைகளைச் செய்திருக்கின்றதென்று தமது வழமையான பல்லவியைப் பாடினர். ஆனால் கூட்டத்தில் பேசிய அத்தனை தமிழ் பேச்சாளர்களும் தேசிய அரசாங்கம் தோட்டத் தொழிலாளரை ஏமாற்றி விட்டது: நாம் நம்பினோம் ஏமாந்தோம் என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தனர்.

நாலரை ஆண்டுகளுக்கு முன் தேசிய அரசாங்கத்தில் சேர்ந்த தமிழர் கட்சிகள் மூன்று. இலங்கைத் தமிழரசுக்கட்சி, இலங்கைத் தமிழ் காங்கிரஸ்கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ். இவர்களில் தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கம் தமிழ்மக்களைக் கைவிட்டு விட்டது. கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்டு விட்டது. இனியும் அந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்து ஆவதொன்றில்லை எனப் பகிரங்கமாக அறிவித்து அரசாங்கத்துடன் இருந்த தொடர்பைத் துண்டித்து விட்டது. அப்போது எதிர்க்கட்சிகள், அவர்கள் சார்பான பத்திரிகைகள் தமிழரசுக் கட்சி தேர்தல் கிட்டுவதால் இப்படி ஒரு பாசாங்கைச் செய்கின்றது என்று துள்ளி மிதித்தனர்.

தமிழ் காங்கிரஸ் கட்சியும் அவர்கள் வெளியேற்றம் வெறும் புலுடா என்று கொட்டாவி விட்டது. இன்று தேசிய அரசுடன் இருக்கும் இ. தொ. கா. நம்பினோர்: ஏமாந்தோம் என்று தேசிய அரசின் ஏமாற்று வித்தையைப் புட்டுக் காட்டிய அரசு மேல் நம்பிக்கையின்மையை தெரிவித்துவிட்டது. இதன் பின்னும் தமிழ் காங்கிரஸ் அரசுடன் ஒட்டி உறவாடி தமிழ் மக்களை மேலும் மேலும் ஏமாற்றி வருகின்றது. இவர்கள் உறவு பற்றித் தமிழ் மக்கள் இப்போது சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர்.

இலங்கையில் அதிக அங்கத்தவர்களைக் கொண்ட இரண்டாவது பெரிய தொழிற்சங்கமென்றும் வருடத்தில் 20லட்சம் வருமானமுள்ள தொழிற்சங்கமென்றும் சுமார் 2000-ம் தோட்டங்களிலும் அங்கத்துவம் வகிக்கும் சங்கமென்றும் கூறப்படும் இ. தொ. காங்கிரஸ் 4 அரை ஆண்டுகளின் பின் அரசாங்கம் தமிழ் மக்களை ஏமாற்றி, விட்டது! தேசிய அரசை நம்பி இனிப் பயனில்லை என்று அட்டன் மாநாட்டில பேசிய ஒவ்வொருவரும் தெரிவித்துவிட்டனர். இவர்கள் பேச்சு இன்று இலங்கை வாழ் அத்தனை தமிழ் மக்களையும் சிந்திக்கச் செய்ய வேண்டும்.

தேசிய அரசாங்கம் ஏற்பட்டபின் 3வது தடவையாக இ. தொ. கா. வருடாந்த மகாநாடு நடைபெற்றது. முந்திய இரண்டு மாநாடுகளும நுவரெலியாவிலும்— மாத்தளையிலும் நடைபெற்றபோது தேசிய அரசாங்கததிடமும், அதன் கொள்கைகளிலும் தலைவர்கள் நம்பிக்கை தெரிவித்தார்கள. ஆனால் அட்டன் மாநாடு அரசாங்கத்தின் குட்டைப் புட்டுக் காட்டியது அரசாங்கத்தின மீது நம்பிக்கை தொலைத்த 18 மாதங்களில் இ. தொ. கா. தனது நம்பிக்கை வீணாகி விட்டதென்பதை பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் பிரகடனப்படுத்தியது.

தலைவர் திரு. தொண்டமான், பொதுச்செயலாளர் திரு. செல்லச்சாமி, திரு. அண்ணாமலை, திரு. சங்கரவடிவு, செனட்டர் திரு. யேசுதாசன் . மற்றும் இ. தொ. கா பேச்சாளர்கள் அனைவரும் அரசாங்கத்தை சாடு சாடென்று சாடினர்.

அரசாங்கத்துடன் நாலரை ஆண்டுகளாக இருந்தும் தோட்டத் தொழிலாளரின் கோரிக்கைகள் எதையும் பெற்றுக்கொடுக்கமுடியாமல் போன இ. தொ. காங்கிரஸ் இன்னும் அரசாங்கத்துடன் தொடர்பைத் துண்டிக்க முன்வரவில்லை, இந்தக் கடைசி நேரத்திலும் அரசாங்கத்தைச் சிந்திக்கவைக்க தலைவர் திரு. தொண்டமான் முன்வராதது விசனத்தை யளிக்கின்றது.

ஆறு கடக்கும்வரை அண்ணை தம்பி, கடந்தபின் அவன் யாரோ நான் யாரோ என்ற போக்கில் அரசு நடந்தும் இன்னும்தான் தலைவர்கள் அரசாங்கத்தைவிட்டு வெளியேறவில்லை. எமது திட்டங்களை நிறைவேற்ற முன்வரவில்லை. அரசு, இனி எமது திட்டங்களை ஏற்றுக் கொள்ளும் கட்சிக்கே எமது ஆதரவு என்று பகிரங்கப் படுத்திய பின்னும் அரசாங்க உறவு எதற்கு இ. தொ. காங்கிரசிற்கு.

மகாநாடு கூட்டி, பெரும் பணத்தை தொழிலாளர் பணத்தைச் செலவிட்டுத் தமக்கு புகழ் தேடிக்கொளவதில்தான் இன்று தோட்டத் தொழிலாளர் தலைவர்கள் இருக்கின்றார்கள். தீர்மானங்கள் தீட்டினால் மட்டும் போதுமா? இனி அடுத்த மகாநாடுவரை ''ஒய்ந்தது பாளை உட்கார்ந்தான் சாணத்தி'' என்று தலைவர்கள் இருந்துவிடுவார்கள். ஜெனிவாவுக்கும். சிங்கப்பூருக்கும் என்று பறந்து திரி

(11ம் பக்கம் பார்க்க)

'புத்தொளி'

# அக்கரைப்பத்தனை அரசினர் பாடசாலையில் மாணவர் கலவரமா? இனக்கலவரமா?

1967ம் ஆண்டு அக்கரபத்தனை அரசினர் பாடசாலையில், இருநேர வகுப்பாக காலையில் சிங்கள வகுப்பும், மாலையில் அதாவது பிற்பகல் 1-30 மணிக்குப் பின்னர் தமிழ் வகுப்பும் நடைபெறத் தொடங்கியது. அன்றில் இருந்தே தமிழ் மாணவர்கள் பல தொல்லைகளுக்கு ஆளாக வேண்டியிருந்தது. இது விடயமாக நாங்கள் பத்திரிகைகளுக்கும் சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிக்கும் தொடர்ந்து எழுதிவந்துள்ளோம். இருந்தபோதும் தமிழ் பிள்ளைகள் விஷயத்தில் பாரபட்சமே காட்டப்பட்டு வந்துள்ளது. உதாரணமாக இந்த பாடசாலைக்கு சடந்த வருட ஆரம்பத்தில ஒரு புதிய கட்டிடமும் சட்[illegible]து ஆனால் இன்று வரை அந்த புதிய மண்டபம் தமிழ் பிள்ளைகளின் இடவசதிக்கு திறந்துவிடவில்லை.

தமிழ் பிள்ளைகளும், ஆசிரியர்களும் இடநெருக்கடியான ஏனைய மண்டபத்தில் மூச்சுவிட முடியாத நிலையிலே சித்திரவதை நிறைந்த சிறைக்கூடத்தில் போன்று கற்பிக்கவும் கற்கவுமாக இருக்கின்றது. இந்த இட நெருக்கடியான கூடத்தில கூட தமிழ்பகுதினர் கடந்த மூன்று ஆண்டுகளாக கலைமகள் பூசை செய்து வருகின்றனர். மூன்று நாளைக்கும் 'கும்பம்' வைத்து பூசை நடத்தி வருவது வழக்கம்.

ஆனால் இம்முறை கடந்த 17ந் திகதி சரஸ்வதி பூசை கொண்டாடப்பட்டபோது. (இடவசதியின்மையால் வழக்கமாக மண்டபத்தின் ஒரு ஒதுக்குபுறத்தில் 'கும்பம்' வைத்து பூசை செய்த வழக்கத்தின்படி) மூன்று 'கும்பமும்', சரஸ்வதி படமும் வைக்கப்பட்டிருந்தது. 18ந் திகதி நோன்மதி விடுமுறை கழிந்த மறுநாள் பாடசாலை நாள் அத்துடன் 'கும்பம்' வைக்கப்பட்ட மூன்றாவது நாள். காலை வகுப்புக்குவந்த சிங்கள பிரிவினர் 'கும்பத்தை தூக்கியெறிந்து விட்டு சரஸ்வதி படத்தை சிங்களப் பிரிவின் தலைமையாசிரியரின் பாதுகாப்பில் வைத்திருந்தனர்; அன்றைய தினம். 1-30 மணிக்கு வகுப்பிற்கு வந்த தமிழ் ஆசிரியர்களும், மாணவர்களும் வைக்கப்பட்டிருந்த கும்பத்தையும்படத்தையும்காணாது திடுக்குற்று. சிங்கள அதிபரிடம் சென்று விசாரித்தபோது படம் மாத்திரம் தன் வசமிருப்பதாகவும் கும்பத்தை பற்றி தனக்கொன்றும் தெரியாது என்று கூறிவிட்டார்.

பிறகு அன்று மாலை 5—45 மணிக்கு தமிழ் பிரிவு வகுப்பு முடிவடைந்ததும், தமிழ் பிரிவின் தலைமை ஆசிரியர் திரு. சபா கந்தசாமி இது விடயமாக அக்கரபத்தனை பொலிஸில் புகார் செய்துவிட்டார்.

இவர் புகார் செய்ததை அறிந்த சிங்கள ஆசிரியர்களும், மாணவர்களும் ஏதோ சதித்திட்டமொன்றில் ஈடுபட்டு மறுநாள் 20ந் திகதி சிங்கள மாணவர்கள் வகுப்பு முடிவடைந்த 1—20 மணிக்கு இந்த பாடசாலையின் யன்னல், கண்ணாடி, கதவு, போன்ற பாடசாலை தளவாடங்களுக்கு சேதம் விளைவித்து விட்டு வகுப்பிற்குச்சென்ற தமிழ் மாணவர்களையும் கற்களினால் வீர எறிந்து காயம் விளைவித்தனர். ஆனால் ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸாரிடம் தமிழ் மாணவர்கள்தான் மேற்படி இத்தகைய சேதம் விளைவித்தனர் என்றும் சிங்கள மாணவர்களை கல்லினால் தாக்கி உடல் அவயங்களுக்கு காயத்வத ஏற்படுத்திவிட்டனர் என்றும் அபாண்டமாக குற்றம் சுமத்தப்பட்டு. நிரபராதிகளான தமிழ் மாணவர்கள் பலரை, புதுக் கட்டிடத்தில் மாலை நேரத்தில் சிங்கள வகுப்பு நடத்தும் ஆசிரியர்களும், மாணவர்களும் அடையாளம் காட்டினர். உண்மையான குற்றவாளிகளை தமிழ் மாணவர்கள் அடையாளம்காட்ட முடியாமல் போய் விட்டது ஏனென்றால் அவர்கள் வகுப்பு முடிந்து வீடு நோக்கி சென்று விட்டதால், நுரளை ஏ' எஸ். பியினால் விசாரணை நடத்தப் பெற்று முடிவில் தமிழ் மாணவர்கள் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். உண்மையான கலவரக்காரர்களை கண்டு பிடிக்க மீண்டும் ஒரு பகிரங்க அணிவகுப்பு ஒன்று இந்த பாடசாலையில் இடம் பெறுமா? என்பதுதான கேள்விக் குறியாக இருக்கின்றது.

இந்த சம்பவத்திற்கு காரணம் எதுவாக இருக்கும் என்று ஆராய்ந்து பார்த்தால் இது திட்டமிட்டு செய்த ஒரு சதி என்பது தெளிவாகின்றது. கடந்த 1967ம் ஆண்டு இந்த பாடசாலையில் தமிழ் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு [illegible] வகுப்பு மாத்திரம் இடம் பெற்றது அடுத்த ஆண்டு அதாவது 1968 ஜனவரி தொடக்கம் பாலர் வகுப்பில் இருந்து 7ம் வகுப்பு வரை உயர்ந்தது. இந்த வருட ஆரம்பத்தில் இருந்து 8ம் வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டது.

இனி அடுத்து வரும் 1970ம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து 9ம் வகுப்பும் தொடங்குவதற்கு நுரளை வட்டாரக் கல்விச் கந்தோர் அனுமதி அளித்து தமிழ்ப்பகுதி தலைமையாசிரியருக்கு சுற்றறிக்கைஅனுப்பவே! (அத்துடன் தமிழ் மாணவர் தொகை சிங்கள பிரிவை முறியடித்து உயர) இந்த சிங்கள வித்தியாலயம் தமிழர் கைகளுக்குள் அகலவா சிக்கப் போகிறது என்று திட்டமிட்டு சிங்களப் பிரிவினர் செய்த நாசவேலை என்பது தெளிவாகின்றது.

இது இவ்வாறிருக்க இந்த நாசவேலை நாட்டில் பொதுத் தேர்தல் நெருங்குகின்ற தறுவாயில் செய்யப்பட்டதனால் இது சாதாரண மாணவர் கலகமாகக் கருதச் செய்யவில்லை பெரிய ஒரு இனக்கலவரத்திற்கே இடப்பட்ட வித்தாகத்தான் கருதப்பட வேண்டும். நாட்டின் தேசிய ஐக்கியம் வருங்கால சந்ததியனரிடமே உண்டு என்பது உண்மையானால் இன்றைய மாணவர்களை வழி நடத்தி செல்லும் ஆசிரியர்கள் ஏன் இத்தகைய வெறுப்புணர்ச்சியை மாணவர்களுக்கு ஊட்டுகின்றார்கள். சிங்கள, ஆசிரியர்களும், மாணவர்களும் செய்திருக்கும் இந்த நாசவேலை அதனைத்தானே உணர்த்துகின்றது.

'கேயெஸ்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டிக்கான கிளர்ச்சி தொடரவேண்டும்

## கனேடிய அரசியல் அமைப்பே இலங்கைக்கு பொருத்தமானது

### ஒற்றையாட்சியால் ஏற்படும் ஆபத்துகள்!

கனடா இரு மொழி பேசும் மக்களைக் கொண்ட நாடு. ஆங்கில மொழியைப் பேசும் பெரும்பான்மை மக்களுடன் சமத்துவமும், சம உரிமையும் தங்களுக்கு இருப்பதாக பிரெஞ்சுமொழி பேசும் சிறுபான்மையினர் உணரும் வகையில் அந்நாட்டின் அரசியல் சட்டம் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டும், சீர்திருத்தப்பட்டும் வந்துள்ளது. காலத்துக்குக் காலம் அவர்கள் புதிய அரசியல் திட்டமொன்றை உருவாக்கி வந்துள்ளதுடன் சகல சமூக மக்களும் தங்களதுஎன்று போற்றும் வகையில் பொது தேசியக் கொடி ஒன்றையும் உருவாக்கிக் கொண்டுள்ளனர். இலங்கையை விட சிறிய நாடுகளும், பல பெரிய நாடுகளும் பல்வேறு முறையிலான சமஷ்டி ஆட்சி முறையை ஏற்றுக் கொண்டுள்ளன ஆனால் கனடிய சமஷ்டிமுறை தான் நமக்கு ஏற்றதாகவும், நல்லதாகவும் அமைகிறது.

சமஷ்டி ஆட்சியின் கீழ் ஒரு மத்திய அரசாங்கமும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இராச்சிய அரசாங்கங்களும் இருக்கும். மத்திய அல்லது சமஷ்டி அரசாங்கம்முழுநாட்டிற்கும் பொதுவான விஷயங்களான வெளி விவகாரம், நிதி, தபால்-தந்திப் போக்குவரத்துகள், துறைமுகம், சுங்கப் பகுதி நிர்வாகம், வர்த்தகம் ஆகியவற்றைக் கவனிக்கும். இதர விஷயங்களை ராஜ்ஜிய அரசாங்கங்கள் நிர்வகிக்கும். இதனால் ராஜ்ஜியங்களுக் கிடையே நல்லமானபோட்டி ஏற்பட்டுநாடு முழு அளவில் வளர்ச்சியடையும்.

சமஷ்டி அரசியல் திட்டமே அநியாயம் செய்ய முடியாத ஆட்சி திட்டமாகும். ஏனெனில் எந்தவொரு ராஜ்ஜியமும் அடுத்த ராஜ்ஜிய மக்களுக்கு அநீதியிழைக்கமாட்டாது. அப்படி செய்தால் அடுத்த ராஜ்ஜியமும் பதிலடி கொடுக்கும் என்ற அச்சம் அலவகளுக்கிருக்கும்.

உதாரணத்திற்கு நமது நாட்டில் 2, 3 அல்லது 4 ராஜ்ஜிய அரசாங்கங்கள் (கிழ் நாடு, மலை நாடு, வடக்கு, கிழக்கு என்ற எல்லை நிர்ணய அடிப்படையில் இருக்குமாயின், கிழக்கு ராஜ்ஜியத்தில் உள்ள முஸ்லிம் பெரும்பான்மை அங்குள்ள தமிழ் சிறுபான்மையினருக்கு பாகுபாடு காட்டமாட்டாது. ஏனெனில் வடக்குராஜ்ஜியத்தில் உள்ள தமிழ்ப் பெரும்பான்மை அங்குள்ள முஸ்லிம் சிறுபான்மையினருக்கு பாகுபாடு காட்டிவிடும் என்ற பயம் அதற்கு இருக்கும். இது போல் வடக்கு ராஜ்ஜியத்தில் உள்ள சிங்கள மக்களுக்கும் பாகுபாடு காட்டப்படமாட்டாது. பதிலடி கிடைக்குமென்ற பயம் இப்படியான பாகுபாடுகளுக்கு இடமளிக்காது.

பல இனமக்கள் வாழும் நாட்டில் உண்மை ஜனநாயகத்திற்கும், ஐக்கியததிற்கும் வழி அமைக்கும் சாதனமே சமஷ்டி ஆட்சி முறையாகும்- சமஷ்டி என்றால் பிரிவினை என்று அர்த்தமல்ல. அது ஒருமைப்பாட்டை மட்டுமல்ல, ஒற்றுமையையும் ஏற்படுத்தும் வழிமுறை.

ஒற்றையாட்சி முறை சிறுபான்மையினரை அவர்களது பிறந்த மண்ணிலேயே இரண்டாந்தர பிரஜையாக்கி. அவர்களின் சுதந்திர உணர்வுகளை நசுக்கி விடுகிறது. எந்த உதவிக்கும், சலுகைக்கும் இன அடிப்படையிலான பெரும்பான்மையினரின் கையை எதிர்பார்த்து நிற்கும் அடிமைமலப்பான்மையை வளர்க்கிறது. தற்சமயம் ஆட்சியாளர்களின் நல்லுறவு காரணமாகவே சிறுபான்மையினர் சலுகைகளைப் பெற்று வாழ்கின்றனர். ஆனால் உரிமை அடிப்படையில் இதனை அவர்கள் பெறவில்லை.

அந்நிய ஆட்சியாளர்களிடம் அடிமைப்பட்டிருந்த காலத்தில் எப்படி இருந்தார்களோ அந்த நிலையில்தான் சிறுபான்மையினர் இன்றும் இருக்கின்றனர்; 150 ஆண்டுகால அடிமை வாழ்வின் காரணமாக ஏற்பட்ட விரக்தி மனப்பான்மையுடனேயே அவர்கள் இன்னும் இருக்கின்றனர். அவர்களுக்கு இன்னும் அரசியல் விடுதலை கிடைக்கவில்லை

கனடாவில்நடந்ததுபோல் பெரும்பான்மை இன மக்களே சமஷ்டி ஆட்சிமுறைக்கு விரும்பி உழைக்கவேண்டும். சிங்கள இன மக்களுக்கு நிதானத்தையும், நியாய புத்தியையும் இறைவன் அளிப்பாராக. அதன்மூலம் தாய் திருநாடான இலங்கைக்கு சுபீட்சமும், ஒற்றுமையும் ஏற்பட அருள்பாலிக்கட்டும்!

உரிமை கிடைக்க அதிக காலம் செல்லும் என்பதனாலோ அல்லது கஷ்டம் என்பதாலோ சிறுபான்மையினர் அடிமை வாழ்வினை ஏற்க முடியுமா? சிறுபான்மையினரின் அரசியல் உரிமை கிட்டும்வரை சமஷ்டிக்கான கிளர்ச்சி தொடர்ந்து நடைபெறவேண்டும்.

**செல்லமுத்து**

---

## நம்பி ஏமாந்த பின்னும் அரசாங்கத்துடன்....

(10ம் பக்கத் தொடர்ச்சி)

வார்கள்; ஆனால் அதே நேரத்தில் தமது உரிமைகளைப் பறிகொடுத்து விமோசனம் கிடைக்காது தவிப்பவர்கள் ஏழைத்தொழிலாளர்களல்லவா?

அரசாங்கத்துடன் இருந்த போது 41,877 பேரை இந்திய பிரஜையாகப் பதிவு செய்தும் இலங்கைப் பிரசைகளாக ஆக 1208 பேரே பதிவுசெய்யப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். தமது சொந்தச் செல்வாக்கை பாவித்தாயினும் பத்தாயிரம் பேருக்காயினும் இலங்கைப் பிரஜா உரிமை பெற்றுக்கொடுக்க தலைவர்கள் முன்வரவில்லை. மாகாநாட்டில் கர்ச்சித்தால் பிரச்சினை தீர்ந்துவிடுமா? சொல்வதல்லால் செயலில் காட்டத் தலைவர்கள் முன்வராமல் இருந்துவிட்டு எல்லாத்துக்கும் அரசாங்கத்தைச் சுட்டிக் காட்டித் தப்பித்துக் கொள்வதும் ஒரு வகைத் தந்திரம்தான்.

'நம்பினேம்; ஏமாந்தோம்' என்று கண்ட பின்னும் அரசுடன் நட்புப்பூண்டு உறவாடுவதால் இ. தொ. காங்கிரஸ் எதைத்தான் சாதிக்கப்போகின்றது?

'நம்பினேம்;ஏமாந்தோம்' என்று கண்டதும் இலங்கைத் தமிழரசுக்கட்சி அரசாங்கத்தைவிட்டு வெளியேறியது போல் இ. தொ. காங்கிரஸும் வெளியேறியிருக்க வேண்டுமல்லவா? அரசாங்கத்துடன் ஒட்டுண்ணிபோல் ஒட்டிக் கொண்டிருந்து கொண்டு அரசாங்கத்துக்குத் தலையும் தொழிலாளருக்கு வாலும் காட்டி தப்பித்துத் தமது பதவிகளை இறுகப் பிடித்திருக்கும் விந்தையே விந்தை!

இ. தொ. காங்கிரஸ்தான் தோட்டத் தொழிலாளர் மேல் அன்பும், பாசமும் வைத்துக் கருமமாற்றுகின்றது. ஏனைய தொழிற்சங்கங்களெல்லாம் தமது தலைவர்களின் வயிற்றுப் பிழைப்புக்காக நடாத்தப்படுகின்றது என்று தலைவர் தொண்டமான் மகாநாட்டில் முழக்கினார். அவர் முழக்கம் யாருக்கு நன்கு பொருந்தும் என்று தோட்டத்தொழிலாளர்கள் எடை போட்டுப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். திட்டங்கள் தீட்டி தீர்மானங்கள் நிறைவேற்றுவதுடன் தோட்டத் தொழிலாளர் பிரச்சினை தீர்ந்து விடுமா? ஒவ்வொரு தொழிலாளர் ... தொட்டு இருக்க ... காணப்படும்.

---

# சங்கப் பலகை

## அண்ணா—ஒரு நோக்கு

வாழ்க்கை வரலாற்று நூல் எத்தகைய முறையில் அமையவேண்டும் என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாக ஆங்கிலத்தில் பல வரலாற்று நூல்கள் எழுந்துள்ளன குறிப்பாக முனைவர் (டாக்டர்) வாழ்க்கை வரலாற்று நூல் எவ்விதம் உருவாக்கப்படவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்றும் மிளிர்கிறது. இவ்விதம் நந்தமிழில் நல் அறிஞர் நயந்து போற்றத்தக்க முறையில் வாழ்க்கை வரலாற்று நூல்கள் எழுந்துள்ளனவா என்று கேட்கப் படின் இல்லை என்றே கவலையுடன் இயம்பவேண்டியிருக்கின்றது.

எனினும் அண்மைக்காலங்களில் எண்ணத்திலோ, அல்லது எழுதப்பட்ட தன்மையிலோ, ஏற்றம் காணப்படாத நிலையிலும் எண்ணிக்கையில் ஏற்றம் காணும் நிலையில் வாழ்க்கை வரலாற்று நூல்கள் பல தமிழில் மலர்ந்துள்ளன. குறிப்பாக அறிஞர் அண்ணாவைப் பற்றி எழுந்த வாழ்க்கை வரலாற்று நூல்கள் பல. ஒரு பெரியவரின் வாழ்க்கை வரலாறு வரையப்படும்போது அவரின் பிறந்த ஆண்டு, கல்வி பயிலத் தொடங்கிய ஆண்டு, திருமணம் செய்த ஆண்டு, இறந்த ஆண்டு என்ற அடிப்படையில் மட்டும் வாழ்க்கை வரலாறு வரையப்படின் அது உப்புசதது அற்ற சுவையற்ற உயிரோட்டமற்ற வாழ்க்கை வரலாறு ஆகவே இருக்கும். மற்றும் தான் விரும்பும் ஒரு பெரியவரின் வாழ்வை எல்லை மீறிப் புகழ்வதும், தான் விரும்பாத ஒருவரை எல்லை மீறித் தூற்றுவதும் தான் வாழ்க்கை வரலாறு என்று எண்ணுவதும் தவறு, மாறாக அது புழுகுப் புராணமாகவே அல்லது வசை புராணமாகவே கணிக்கப்படும். வாழ்க்கை வரலாறு எழுதப்படும்பொழுது ஒரு பெரியவரின் பண்பு நலன்கள், அவரின் பல்துறைப் பட்ட பணி அவற்றின் தாக்கம், அவர் வாழ்ந்த சூழ்நிலை, அவர் அடிப்படையில ஒரு மானிடன் என்பதனால் அவர் வாழ்வில் காணப்படும் குறைநிறைகள், முரண்பாடுகள், இறுதியில் அவர் வாழ்வில் தலைதூக்கி உள்ள நிலைத்த பண்புகள் காய்தல் உவத்தல் இன்றி நடுநிலை நின்று நுணிகி ஆராயப்படவேண்டும். அப்பொழுதுதான் அது நிலயினை நிலைத்து வாழத்தக்க உண்மையும் சுவையும் உடைய வாழ்க்கை வரலாற்று நூலாக விளங்கமுடியும்.

திரு. கரிகாலன் அவர்களுடைய அண்ணா ஒரு நோக்கு என்னும் திறனாய்வு அடிப்படையில் அண்ணாவின் பல்துறைப் பணிகளை, பண்பு நலன்களை ஆராயும் இந்நூல், யாம் முன்பே குறித்த—யாம் முழுமையாக எதிர்பார்க்கின்ற பண்பு அனைத்தையும் கொண்ட ஒருநிறைவு பெற்ற நூல் என்று கூறி எம்மையும் வாசக நேயர்களையும் நாம் ஏமாற்ற விரும்பவில்லை. இவ்விதம் நடுநிலை நின்று பிறழ்வது ஒரு நூலை ஆய்பவரின் பண்பாக அமைய முடியாது என்பதையும் யாம் நன்கு உணர்கிறோம்.

ஆனால் இது வரை அண்ணா பற்றி எழுந்த வாழ்க்கை வரலாற்று நூல்களில் தலைசிறந்த நூலாக திரு. கரிகாலன் எழுதிய இந் நூல் விளங்குகிறது என்பது மட்டும் யாம் இங்கு அறுதியிட்டு உறுதியுடன் கூற முடியும்.

இந் நூலுக்கு அணிந்துரை வழங்கிய ஒருவராகிய சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் 'அண்ணா — ஒரு நோக்கு' என்ற இந் நூல் இதுவரை அண்ணாவைப் பற்றி வெளிவந்த நூல்களிலே மிகவும் சிறந்தது என்று கூறுவேன். பெரிதும் உழைத்து இந் நூலை உருவாக்கி இருக்கிறார் ஆசிரியர் கரிகாலன். அண்ணாவின் புகழ் போல இந் நூலும் மணக்கிறது.............. தமிழகத்தின் 30 ஆண்டு வரலாற்றுக் குறிப்புகள் இந் நூலில் குவிந்து இருக்கின்றது.' என்று பொழிந்து இருக்கின்ற கருத்து வெறும் வெற்றுரையோ அல்லது புகழுரையோ அல்ல மாறாக பொருள் பொதிந்த பொன்னுரையென்றேயாம் ஏற்றாக வேண்டும்.

அண்ணாவை 15 தலைப்புக்களில் ஆராயும் இவ்வாசிரியர் ஒவ்வொரு தலைப்பிற்கு மேலேயும் புறநானூற்று புலவர் தொட்டு இறறை வரை வாழ்ந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஈறாக மொழிந்த எற்றமிகு கருத்துக்களை மேற்கோள்களாக ஏற்ற முறையில் எடுத்தாண்டிருப்பது நூலுக்கு மெருகூட்டுவதுடன் ஒவ்வொரு தலைப்பின் உள்ளடக்கத்தையும் சுருக்கி உணர்த்தி நிற்கின்றன.

'ஈழக் தமிழர் கண்ட அண்ணா' என்ற தலைப்பில் இந் நூலில் அவர் வரைந்துள்ள பாத்தி ஒவ்வொரு ஈழத் தமிழ் மகனும் தவறாது படி அப்பயன் பெற வேண்டிய சிந்தனையை கிளறும் நெஞ்சுருக்கும் பகுதியாகும்.

'ஏன் சமசமாஜிகளை எதிர்க்கிறோம்' 'ஏன் தமிழரசு' ஆகிய அரிய அரசியற் படைப்புக்களை எமக்கு முன்பு அளித்த இந் நூல் ஆசிரியர் ஏறக்குறைய 140 பக்கங்கள் கொண்ட 'அண்ணா ஒரு நோக்கு' என்ற இச்சிந்தனைக் கருவூலத்தை எமக்கு அளித்துள்ளார். அண்ணா தமிழகத்தில் தோன்றினாலும் அவரின் புகழ் தமிழர் வாழும் கடல் கடந்த நாடுகள் அனைத்திற்கும் பரவியுள்ளது. அத்தகைய புகழ் மணக்கும் நூலாகிய இந் நூலும் துலங்குவதுடன் கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் உள்ளத்தையும் ஈர்க்கும் நூலாக இந் நூல் மிளர்வது உறுதி.

மறைந்தும் மறையாத மாபெரும் தலைவன் [illegible] சிங்கம் நினைவாக மலர்ந்துள்ள இந் நூல் தன் முகப்பில் அண்ணாவின் எழில் தோற்றத்தையும் ஏற்ற முறத் தாங்கி வெளிவந்துள்ளது.

ஈழத்தின் முக்கிய புத்தகசாலைகள் அனைத்திலும் கிடைக்கத்தக்கதாய் வெளிவந்துள்ள இந் நூலின் விலை ரூபா 2/50 சதம். வரலாற்று நூல் எவ்விதம் அமைய வேண்டும் என்று வினுக்கப்படும் வினாவுக்கு நல்விடையாய் அமைந்துள்ள இந்நூல் தன் அறிவை பெருக்க விரும்பும் ஒவ்வொரு தமிழனின் இல்லத்திலும் இடம்பெற வேண்டிய நூலாகும்.

கிடைக்குமிடம்: க. சுப்பிரமணியம் 23, காலி வீதி, கொழும்பு-4.


—ஈழவேந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இரசிகப் பெருமக்களுக்கு மனங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்களை சினிமா ஸ்தாபனத்தார் தெரிவிக்கிறார்கள்.

## இப்பொழுது காட்சிதருகிறது

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ் நகர்) விஜயா (மட்டு நகர்) வெம்பிளி (கண்டி) ராஜு (நீர் கொழும்பு) மொடேன் (பண்டாரவளை)



* சிவாஜிகணேசன் * பத்மினி * கே. ஆர் விஜயா நாகேஷ் மனோரமா வி. கே. ராமசாமி நடிக்கும்

# பாலாடை

திரைக்கதை டைரக்ஷன்: பீம்சிங்

2வது வாரம் கெப்பிட்டல் (கொழும்பு)

வஞ்சிக் கோட்டை வாலிபன் (புத்தம் புதிய கொப்பி)

**திரையிடும் நன்னாளை எதிர்பாருங்கள்!**

தீபாவளித் திருநாளை விமரிசையாகக் கொண்டாட சிலோன் எண்டடெயின்மென்ட்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கவிருக்கும் அரும்பெரும் படைப்பு. மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் இலட்சிய தயாரிப்பு

# அடிமைப் பெண்

(ஈஸ்ட்மன் கலர்)

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, மனோகர், அசோகன், சோ, ராஜஸ்ரீ, ஜோதிலட்சுமி, பண்டரிபாய் மற்றும் பலர் நடித்தது

கதை, வசனம்: எம். ஜி. ஆர். டைரக்ஷன்: கே. சங்கர் இசை கே. வி. மகாதேவன்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது. சென்ட்ரல் (மருதானை) ஸ்ரீதரின் **தேன் நிலவு** (புதிய கொப்பி)

ஜெமினி கணேசன் வையந்திமாலா, தங்கவேலு, —நடித்த—


சிலோன் தியேட்டர்சார் தீபாவளியை கொண்டாடும் அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார்கள்

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) வின்சர் (யாழ் நகர்) இம்பீரியல் (மட்டு நகர்) ஆகிய திரைகளில்!

தலைவிதி என்பது வெறும் கூச்சல்
எண்ணித்துணிந்தால் இங்கு எனை நடக்காது?
வெற்றிவேண்டுமா போட்டுப் பாரடா

சிரிப்பு நடிகர் நாகேஷ், சுந்தரராஜன், சௌகார் ஜானகி, ஜெயந்தி, எம். ஆர். ஆர். வாசு, முத்துராமன், மனோரமா மற்றும் பலர் நடித்த

# எதிர் நீச்சல்




இதை மனதிற்கொண்டு மாடிப்படி மாது (நாகேஷ்) வாழ்ந்தான், அவன் போட்ட எதிர்நீச்சலில் வெற்றி கண்டானா?

## இன்றே பாருங்கள்!


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969 வருடம் நவம்பர் மாதம் 8-ந் திகதி [illegible] தொலைபேசி: 23411

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org